# முறையீடும் மறுமொழியும்

★

அல்லாமா
முஹம்மத் இக்பாலின்
"ஷிக்வா"
"ஜவாபெ ஷிக்வா"

★

முஸ்லிம் வாலிபனே! இக்காலத்திலே சத்திய இஸ்லாத்தின் கப்பலை நடத்திச்செல்வது உனது பொறுப்பாகும்.
[மறுமொழி 29 : 5]

இளைப்பாறும் நேரம் உனக்கு எங்கிருக்கிறது? நீ செய்யவேண்டிய பணி இனியும் எவ்வளவோ இருக்கிறதே! [மறுமொழி 31 : 5]

★

தமிழாக்கம்
ஆசிரியர், ஸையித் இப்ராஹீம், எம். ஏ., எல். டி.
ஜமால் முஹம்மத் கல்லூரி
திருச்சிராப்பள்ளி.

வளர்மதி பதிப்பகம்
34, இஸ்லாமியாபுரம்,
:: திருச்சிராப்பள்ளி.

Q7:4
N56.
111441

முதற் பதிப்பு—ஏப்ரல், 1956
இரண்டாம் பதிப்பு—மே, 1956
மூன்றும் பதிப்பு—ஏப்ரல், 1957

Q7:4
N56

## உட்பொருள்

1. முறையீடு
(ஷிக்வா)

2. மறுமொழி
(ஜவாபே ஷிக்வா)

உரிமை பதிவு

TAMIL NADU ARCHIVES LIBRARY
EGMORE, MADRAS-600 008
No. 11441

விலை அணா 12

# முன்னுரை.

அல்லாமா முஹம்மத் இக்பாலை ஒரு கவிமணி, தத்துவஞானி, என்று மட்டும் கூறிவிடமுடியாது. "மக்களது எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் காரணமான இயற்கைச் சட்டங்களை, ஆயுள் முழுமையும் ஆராய்ந்து, அவற்றை முஸ்லிம்கள் மூலமாக உலகினருக்குக் கற்பிக்கும் பெரும் போதகர்" என்று அந்த மகானைக் கூறுவதே தகுதியாகும்.

குர்ஆனைப் பாதுகாத்து. அதன் ஒளியை உலகில் பரப்பும் பொறுப்பு முஸ்லிம்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, குர்ஆனை மறந்து, தூக்கத்திலே ஆழ்ந்து கிடக்கும் முஸ்லிம்களைத் தட்டி யெழுப்பி, அவர்களது வீழ்ச்சியின் காரணத்தை விளக்கி, முஸ்லிம்களும், முஸ்லிம்கள் மூலமாக, உலக மக்கள் அனைவரும், குர்ஆன் காட்டிய வழியைப் பின்பற்றினால், மெய்யாகவே மறுமலர்ச்சி பெறுதல் உறுதி என்கிறார் இக்பால்.

எனவே, இக்பாலை அறியுமுன், குர்ஆனை அறிதல் நமது கடமையாகும். பதினான்கு நூற்றாண்டுகளாக ஒரு புள்ளியேனும் மாற்றப்படாத, எல்லாக் காலங்களுக்கும் பகுத்தறிவிற்கும் ஏற்ற, புனித வேதநூல் குர்ஆன்.

வையகத்திலே வாழ்வோருக்கெல்லாம் பூர்ண வழிகாட்டியான இந்த குர்ஆனைப் பின்பற்றுவோரான முஸ்லிம்களுக்கு ஏன் "கெட்டகாலம்" வந்தது, என்று இக்பால் எடுத்துக்காட்டுகிறார்.

"ஷிக்வா" என்ற முறையீட்டிலே, குர்ஆனுடைய விதிகளையும் இறை நாமத்தையும் உலகில் பரப்பிய முஸ்லிம்களுக்கு இறையருள் குறைந்துவிட்டதாக முறையீடு செய்யப்படுகிறது. தங்கள் குறைகளை மறந்து, தங்கள் இழிநிலைக்காகப் பிறர்மீது குற்றங்காணும் மனித இயல்பு இதில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

"ஜவாப்" என்ற மறுமொழியிலே, முஸ்லிம்கள்மீது இறைவன் நியாயம் தவறி நடக்கவில்லை என்றும், அவர்களது இழிநிலைக்கு அவர்களே காரணஸ்தர் என்றும், ஆனால், முஸ்லிம்கள் குர்ஆனைப் பின்பற்றி நடப்பாராயின், அவர்களது முயற்சியே அவர்களது "தக்தீர்" என்றும் விளக்கப்பட்டிருக்கிறது.

பொதுவாக எல்லா மக்களும், குறிப்பாக முஸ்லிம் வாலிபரும் இதைப் படித்துப் பயன் பெறுவாராக!

*ஹிஜ்ரி 1375, ரமலான் 22*
4—5—1956.
*ஜமால் முஹம்மத் கல்லூரி.*
*திருச்சிராப்பள்ளி.*

**ஸையித் இப்ராஹீம்.**

# மூன்ரும் பதிப்பு

இச் சிறிய நூலின் மூன்ரும் பதிப்பு வெளிவர வழி வகுத்த வல்லோனை வாழ்த்துகிறேன். அல்லாமா இக்பாலின் கவிதைகள் பலவற்றையும் தமிழில் எளிய வசன நடையில் ஆக்கவேண்டுமென்ற அவா எனக்கு வெகு காலமாக உண்டு.

அல்லாமாவின் சொற்கள் முத்தும் மணியும் அள்ளித் தெளித்ததுபோல மிளிர்ந்திருக்கின்றன. அவரது சொல்லினிமை ஊனையும், உயிரையும், உள்ளத்தையும் கவருகின்றது. இந்த மாகவியின் மலர் மணச் சோலையிலே உலாவ, அதன் நறுமணத்தை நுகர வாரீர்! என்று அமிழ்தினும் இனிய அவரது அருஞ் சொற்கள் அழைக்கின்றன. உள் ஒளியும் உள் உணர்வும் பெறவாரீர்! என்று அழைக்கிருர் இக்பால். தமது நிலை அறியாத மக்களைத் தட்டி யெழுப்புகிருர். விழிப்படை! எழுந்திரு! நட! முன்னேறிச் செல்! நீ யார் என்று அறி! உனது கடமையை உணர்! என்கிருர்.

எனவே, உள்ளத்திலே கலந்து தித்திக்கும் இந்தச் செழுந்தேனை, வையகத்தை வானகமாய்ச் சமைத்திடும் நறுமணப் பூந் தென்றலை நுகருங்கள்! இது உங்கள் நாவில் ஊறட்டும்! நெஞ்சில் கலக்கட்டும்! உங்கள் வாழ்வை வளஞ் செய்யட்டும்!. இக்பாலின் இஸ்லாமிய பூங்காவுக்கு வாருங்கள்! அதன் நறுமணத்தை இன்புற நுகருங்கள்! அதை அனுபவத்தில் அறியவேண்டும். சொல்லால், எழுத்தால், விரிவுரையால் அவ்வளவும் அமையாது. எனவே அருட்கவியின் அமுதூற்றை அள்ளி அள்ளிப் பருகுங்கள்.

• •

*ஹிஜ்ரி* 1376, *ரமலான்* 1
2—4—1957
*ஜமால் முஹம்மத் கல்லூரி,*
*திருச்சிராப்பள்ளி.*

**ஸையித் இப்ராஹீம்.**

# 1. முறையீடு

(ஷிக்வா)

## அருளாளன் அன்புடையோன் அல்லாஹ்வின் திருப்பெயரால்

---

### 1

1. என்றோ எதையோ இழந்தவன்போல் நான் ஏன் இருக்கவேண்டும்? எனக்குக் கிடைக்கும் இலாபத்தைப் பெற முயற்சிக்காமல் நான் ஏன் மறதியாய் இருக்க வேண்டும்?

2. வருங்கால நன்மைகளைப் பெற முயலாமல் சென்ற தினத்தின் துயரையெலாம் சிந்தை செய்து நான் ஏன் அழவேண்டும்?

3—4. புல்புல் பறவையின் சோகக் கதையைக் கருத்துச் செலுத்திக் கேட்ட பின்பும் பேசாமலிருக்க, தோழா! நானும் ஒரு மலரா என்ன?

5. இறைவனிடமும் முறையிடுதற்கு என் கவித் திறன் எனக்கு உற்சாகத்தை ஊட்டுகிறது.

6. ஆ! அல்லாஹ்வின்மீதே குறை கூறவேண்டிய அதிகப்பிரசங்கித்தனம் எனக்கு ஏற்பட்டுவிட்டதே!

## 2

1. இறைவனது உவப்பிற்குக் கீழ்ப்படியும் வழக்கத்தில்—ஆண்டவனையே அடைக்கலம் என்று அமைந்து போவதில்—நாங்கள் புகழ் பெற்றிருப்பது உண்மையே

2. எனினும், எங்கள் துயரக் கதையைக் கூற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்டது.

3. நாங்கள் மீட்டப்படாத யாழ் போலிருக்கிறோம். எனினும், முறையிடுதற்கு மனம் நிறைந்துத் ததும்பிக் கொண்டிருக்கிறது.

4. எங்கள் சோகம் நிறைந்து, நாவின் வழியாக வெளிவரும்பொழுது, அதை அடக்க எங்களால் முடிய வில்லை.

5. இறைவனே! உனது உண்மைப் பணியாளரின் முறையீட்டையும் ஒரு சிறிது கேட்டுக்கொள்!

6. உன்னை எக்காலமும் புகழும் வழக்கமுள்ள அன்பர்களிடமிருந்து உன் குறைகளையும் கொஞ்சம் கேட்டுக்கொள்!

## 3

1. ஆதியாகிய உனது சன்னிதானம் தொன்று தொட்டே இருக்கிறது.

2. பூஞ்சோலைக்கு எழிலூட்டுதற்குமட்டுமே மலர்கள் இருந்தன. ஆனால், அம்மலர்களின் நறுமணத்தைப் பரப்புதற்குரிய இளங்காற்றின் இயக்கம் அங்கு இல்லாமலே இருந்தது. (இறைவன் இருந்தது உண்மையே. ஆனால், இறைவனது பண்புகள் வெளியாகவில்லை.)

3. எல்லோருக்கும் ஒரே விதமாய் அருள்மழை பொழியும் அல்லாஹ்வே!

4. இளங்காற்றின் இயக்கம் இல்லாமல் பூவின் நறுமணம் எவ்வாறு பரவ முடியும்? நீயே தீர்ப்புக்கூறு.[1]

5. உன் பெருமையை உலகினுக்கு உணர்த்தும் கவலை[2] யொன்றே எங்களுக்கு ஆறுதல் அளிக்கும் அமுதாயிருந்தது.

6. இன்றேல், முஹம்மத் (ஸல்) நபியவர்களைப் பின்பற்றுவோர் உனக்காக உலகத்தாருடன் பகைமை கொண்டது காரணமில்லாமலா?[3]

---

1. இறைவனுடைய நாமத்தையும் பண்புகளையும் (தாத்—ஸிபாத்) முஸ்லிம்கள் மட்டுமே உலகில் விளம்பரம் செய்தார்கள்.

2. உன்னைப்பற்றி உலகில் நாங்கள் விளம்பரஞ் செய்வதில் ஏற்படும் துன்பங்களெல்லாம் எங்களுக்கு மனச்சாந்தி என்னும் மருந்தாக மாறிவிட்டன. மனஉறுதி அளித்தன.

3. இஸ்லாமிய ஏக தெய்வக் கொள்கையை விளம்பரஞ் செய்வதென்றால், உலகிலுள்ள காபிர்களை (இறைவனை நிராகரிப்போரை) போருக்கு அழைப்பதாகும். ஸுல்தான் நூருத்தீன் ஜங்கீ, ஸுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி இவ்விருவரின் வாழ்க்கை வரலாறுகள் இதற்குச் சான்றாகின்றன.

## 4

1. நாங்கள் வருமுன் உன் உலகின் தோற்றம் வெகு விசித்திரமாக இருந்தது.

2. கற்களேயும் மரங்களேயும் வணக்கத்திற்குரிய பொருட்களாக மக்கள் வணங்கி வந்தார்கள்.

3. கண்ணுல் காணும் பொருளுக்கே தமது கருத்தில் மனிதர் இடமளித்திருந்தார்கள்.

4. பார்வைக்கு எட்டாத அரூபியான அல்லாஹ்வை மக்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள்.

5. உலகினில் உன் நாமத்தை உச்சரிப்பவர் எவரும் இல்லாதிருந்ததும் உனக்குத் தெரியாதா ?

6. முஸ்லிம்களுடைய புஜபல பராக்கிரமம் ஒன்றே உன் பெயரை உலகில் உயர்த்தியது.

## 5

1. ஸல்ஜூகியரும்[1] தூரானியரும்[2] இவ்வையகத்திலே வசித்தார்கள்.

2. சீனர்கள் சீனாவிலும், ஸாஸானிகள்[3] ஈரானிலும் வாழ்ந்தார்கள்.

3. இதே உலகினிலே நாகரிக கிரேக்கரும் பெரு வாழ்விலிருந்தார்கள்.

4. யூதர்களும் கிறிஸ்தவர்களும் உலகிலே வாழ்ந்தார்கள்.

5. ஆனால், உனது நாமத்திற்காகப் புனிதப் போர் புரிந்தோர் யார்?

6. சீரழிந்த உலகினைச் சிறப்படையச் செய்து, ஏகத்துவத்தை நிலைக்கச் செய்தோர், முஸ்லிம்களைத் தவிர வேறு எந்த இனத்தாருமில்லையே!

---

1. ஸல்ஜூக்—துருக்கியரது ஒரு கோத்திரத்தின் பெயர்.

2. தூரானி—ஈரானுக்கு வடக்கிலுள்ள துர்கிஸ்தானில் இருந்த மக்கள்.

3. ஸாஸானி—பூர்வ ஈரானிய அரச குடும்பம்.

## 6

1. உனக்காக உயிரை மதியாமல் போரிட முனைந்து முன்னேறியோர் யார்?

2. சிலபோது நிலத்தில் நின்று நாங்கள் சமர் செய்தோம். சிலபோது நீரிலும் போர் புரிந்தோம்.

3. சிலபோது ஐரோப்பாவில் மாதாகோவில்களில் நின்று பாங்கு[1] நாதம் எழுப்பினோம்.

4. சிலபோது ஆப்பிரிக்கா கண்டத்தின் ஸஹராவில் சுடுமணலில் நின்று, உன் பரிசுத்த நாமத்தை முழக்கினோம்.

5. மண்ணுலகாளும் மாவேந்தரது மாண்புறு காட்சிகள் பல கண்டும், அவற்றால் எங்கள் கண்கள் கடுகளவேனும் மயங்கவில்லை.

6 உன்னோடு மாறுபட்டோரின் கூரிய வாட்கள் எங்கள் மார்பை நோக்கி வரும் வேளையிலும், நாங்கள் கலிமா[2] ஓதினோம்.

---

1. பாங்கு = தொழுகைக்கு அழைப்பு.

2. கலிமா = லாயிலாஹா இல்லல்லாஹு, முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்—வணக்கத்திற்கு உரியோன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவருமில்லை. முஹம்மத் (ஸல்) அல்லாஹ்வுடைய தூதர்.

## 7

1. உனக்கானப் பெரும்போர்களிலே பெருந்துயரங்களை ஏற்றுக்கொள்ளவே நாங்கள் உலகில் உயிர்வாழ்ந்தோம்.

2. மேலும், உன் பெயரின் பெருமைக்காக நாங்கள் மாண்டு மடிந்தோம்.

3. உலகை வென்றடக்க நாங்கள் வாளேந்திப் போருக்குச் செல்லவில்லையே !

4. மரணத்தை மதியாமல் நாங்கள் உலகில் அலைந்தது நிலையில்லாச் செல்வம் பெறுவதற்காக அல்லவே !

5. முஸ்லிம் இனமானது பொன்னையும் பொருளையும் விரும்பியிருந்தால்,

6. விக்கிரக வணக்கத்தை ஆதரிப்பதை விட்டு, அதை ஒழிக்க முன்வருமா ?

## 8

1. உனக்காகப் புனிதப்போரில் இறங்கிய பிறகு நாங்கள் பின்வாங்கியதே இல்லையே!

2. சிங்கம்போன்ற மாவீரர்களையும் புறங்காட்டி ஓடச் செய்தோமே![1]

3. உன் மெய்வழியை விட்டு மாறுபட்டோரைக் கண்டால், நாங்கள் பொறுக்கமாட்டோமே!

4. வாள் என்ன? பீரங்கிகளின்[2] எதிர்ப்பிலும் நின்று நாங்கள் போராடினோமே!

5. ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஏகத்துவத்தை உறுதியாய் ஊன்றினோமே!

6. மாற்றாரது ஓங்கிய வாளின் நிழலிலும் இந்தச் செய்தியைப் பரப்பினோமே![3]

---

1. மூத்தா போரிலே ஒரு லக்ஷம் ரோமருடன் மூவாயிரம் முஸ்லிம்கள் போர்புரிந்தார்கள்.

2. பீரங்கி—உதுமானியத் துருக்கியர் தங்கள் எதிரிகளுடன் போர்புரியும்பொழுது போர்க்களத்தில் எதிரிகளது பீரங்கிகளைக் கைப்பற்றிக்கொண்டு வருவார்கள். அவர்களது வீரத்தைக் கண்டு எதிரிகள் திகிலடைந்து விடுவார்கள். இழந்த பீரங்கிகளைப் பிடுங்க முயற்சிக்கமாட்டார்கள். உலக வரலாற்றில் துருக்கியரே இத்தயைத் துணிகரச் செயலைச் செய்தார்கள்.

3. நபிபெருமானாரின் தோழர் (அஸ்ஹாப்)கள் இஸ்லாமியப் பிரசாரத்தின்போது தங்கள் உயிர்களை அர்ப்பணஞ்செய்த வரலாறுகளைக் குறிப்பிடுகிறது.

## 9

1. நீயே சொல்! பளுவான கைபர்[1] கோட்டைக் கதவைப் பெயர்த்தெறிந்தவர் யார்?

2. ரோம சக்ரவர்த்தியின் இஸ்தம்பூல் முதலான நகரங்களை வென்றவர் யார்?

3. கையால் படைக்கப்பட்ட கடவுளர்களின் உருவங்களைத் தகர்த்தெறிந்தவர் யார்?

4. உன்னை நிராகரித்தோரின் படைகளைச் சங்காரம் செய்தவர் யார்?

5. ஈரானிலிருந்த பார்ஸிகள்[2] வணங்கும் அக்கினி குண்டத்தை அணைத்தவர் யார்?

6. அப்பால், (அவர்களால் கைவிடப்பட்டிருந்த) ஏகத்துவத்தை மறுபடியும் உயிர்ப்பித்தவர் யார்?

---

1. கைபர்—இது மதீனுவுக்கு வடக்கிலிருந்தது. இங்கிருந்த யூதர்கள் இஸ்லாத்தின் பகைவர். வெல்லமுடியாதென்று கருதப்பட்ட இந்தக் கோட்டையின் வாயிற்கதவை ஹஸ்ரத் அலி (ரலி) பிடுங்கியெறிந்து, வெற்றிபெற்ருர். ஹஸ்ரத் அலி (ரலி) உடைய உறுதியான (ஈமான்) இறைநம்பிக்கையை இச்செயல் நன்கு விளக்குகிறது.

2. பார்ஸிகள்—ஈரான் நாட்டில் பார்ஸிகள் நெருப்பையே தெய்வமாக வணங்கினர்கள்.

## 10

1. உன்னையே அடைய விரும்பியோர் முஸ்லிம்களைத் தவிர வேறெந்த இனத்தார்?

2. உனக்காக எத்தகைய துன்பத்தையும் ஏற்றுப் போர் செய்ய முனைந்தோர் யார்?

3. எந்த இனத்தாரின் வாள் வலிமையானது "ஆண்டவன் ஆட்சி"[1] உலகில் நிலைபெற உனக்கு உதவியது?

4. இன்பத் துயிலில் ஆழ்ந்திருந்த உன் உலகம் எவரது தக்பீர்[2] முழக்கத்தால் விழிப்படைந்தது?

5-6. யாருடைய அச்சத்தால் அந்த விக்கிரகங்கள் நடுநடுங்கிக் குப்புற விழுந்து, "ஹுவல்லாஹு அஹத்"[3] என்று கூறின?

---

1. ஹுகூமதுல் இலாஹி = ஆண்டவன் ஆட்சி.

2. தக்பீர் = அல்லாஹு அக்பர் = இறைவனே மேலானவன்.

3. ஹுவல்லாஹு அஹத் = இறைவன் ஒருவனே.

## 11

1—2. கடும் போருக்கிடையிலும் தொழுகை நேரம் வந்துவிட்டால், முஸ்லிம்கள் உடனே கிப்லாவை[1] நோக்கி நின்று, நெற்றியை நிலத்தில் வைத்து உன்னைத் தொழுவார்கள் !

3. அச்சயம், மன்னர் மஹ்மூதும், அடிமை அயாஸும், ஒரே வரிசையில் தோளோடு தோள் சேர்த்து நின்று தொழுதார்கள் ![2]

4. அந் நிலைமையில், அடியான், எஜமான், என்ற வேறுபாடு மறைந்து இருவரும் ஒன்ருயினர் !

5, அடியானும் - எஜமானும், ஏழையும் - சீமானும், அந்நேரத்தில் சமமாகவே தோன்றினர் !

6. உந்தன் திருமுன் அடிபணியும் நேரத்திலே, ஒருவருக்கொருவர் உடன் பிறந்தோராகவே கருதினர்.

---

1. கிப்லா = இறை வணக்கத்திலே முஸ்லிம்கள் நோக்கி நிற்கும் திசை = கஅபா.

2. இஸ்லாமிய ஜமாத் (கூட்டுத்) தொகையில் உண்மையான மானிட சகோதரத்துவத்தின் காட்சியைக் காணலாம். இனம், கோத்திரம், செல்வம், அதிகாரம் என்ற பாகுபாடின்றி எல்லோரும் சமமாகி விடுவர்.

## 12

1. உலகின் எல்லாப் பாகங்களிலும் நாங்கள் இரவி லும் பகலிலும் அலைந்தோமே!

2. மதுக்கிண்ணம் போன்று உன் ஏகத்துவ மதுவை நாங்கள் எங்கும் பரப்பினோமே!

3. உனது செய்தியைப் பரப்புவதற்காக நாங்கள் காட்டை, மலையைக் கடந்திட்டோமே!

4. எப்பொழுதாயினும் நாங்கள் வேலையற்று வீணாக அலைந்ததை நீ அறிவாயா?

5. காடுகளில்தான் அலைந்தோமென்றால், கடல்களை யும் கூட நாங்கள் விட்டுவைத்தோமா?

6. அத்லாந்திக் மகா சமுத்திரத்திலும் நாங்கள் குதிரைகளை ஓட்டிச் சென்றோமே![1]

---

1. இது உண்மையான வரலாறு. உக்பா பின் நாபிஃ என்னும் முஸ்லிம் தளபதி, வட ஆப்பிரிக்காவிலே இறைவ னுடைய ஏகத்துவப் பிரச்சாரஞ் செய்துகொண்டு, மேற்கு நோக்கி அத்லாந்திக் மகா சமுத்திரம் வரை சென்றார். குதிரை யுடன் கடலில் இறங்கி, வானத்தை நோக்கி, "இறைவா! இதற் கப்பால், பூமியிருந்தால் அங்கும் சென்று உனது நாமத்தைப் பரப்புவேனே!" என்று கூறிவிட்டுத் துக்கத்துடன் திரும்பினார்.

## 13

1. உலக ஏட்டிலிருந்து அறியாமைக் கறைபடிந்த இதழ்களை அகற்றியோர் நாங்களே![1]

2. அறியாமை என்னும் கொடியோனால் சிறை படுத்தப்பட்டிருந்த மனித இனத்தின் தளையை அறுத்து விடுதலை வழங்கியோர் நாங்களே![2]

3. உனது கஅபாவை சாஷ்டாங்க வணக்கத்தின் மூலம் சிறப்புறச் செய்தோர் நாங்களே![3]

4. உனது குர்ஆனை உயிரினும் பெரிதாக மதித்து மார்போடு அணைத்தெடுத்தோர் நாங்களே!

5. இவ்வளவு தொண்டு செய்தும், விசுவாசமற்றோர் என்பதாக எங்கள்மீது குற்றஞ் சாட்டப் படுகிறதே!

6. எங்களை நீ "நன்றி மறந்தோர்" என்பாயாகில், "நீயும் தயாநிதி அல்ல" என்று நாங்கள் கூறக்கூடாதா?

---

1. ஜாஅல் ஹக்க வ ஜஹகல் பாத்தில. = உண்மை உதயமாயிற்று பொய்மை மறைந்தது. இறைவனுக்கு இணை வைப்பதை (குப்ரை) உலகினின்றும் அகற்றியோர் முஸ்லிம்களாவர்.

2. உலகில் ஒரு மனிதன் வேறு மனிதன்மீது ஆட்சி செய்யமுடியாது என்பது இஸ்லாமிய கொள்கையாகும். ஆட்சி அல்லாஹ்வையே சேர்ந்தது. உலகிலே அல்லாஹ்வின் சட்டம் (குர்ஆன் வகுத்த திட்டம்) மக்களால் பின்பற்றப் படுவதை முஸ்லிம் அதிபர் மேற்பார்வையிடுவார். எனவேதான், கலீபா உமர் (ரலி) காலத்திலே ஒரு சாதாரண மனிதன், மக்கள் நிறைந்த கூட்டத்திலே, அவரை நோக்கி "எல்லா முஸ்லிம்களுக்கும் கிடைத்ததுபோல, உங்கள் பங்கில் உங்களுக்குக் கிடைத்தது இரண்டு கஜம் துணிதானே! இதில் எவ்வாறு நீங்கள் உங்களுக்காக மேலங்கி தயாரித்துக் கொண்டீர்கள்?" என்று கேட்கும் உரிமை கிடைத்தது.

3. ஒவ்வோர் ஆண்டிலும் ஹஜ் கடமையை நிறைவேற்றி, உனது வீடாகிய கஅபாவைச் சிறப்புறச் செய்தோர் நாங்களே.

## 14

1. உலகினிலே எத்தனையோ இனத்தார் உண்டு. அவர்களில் பாவிகளும் உண்டு.

2. அடக்கமுடையோரும் உண்டு. கர்வ போதையில் வெறிகொண்டோரும் உண்டு.

3. அவர்களில் சோம்பேறிகளும் உண்டு; மறதியாளரும் உண்டு. அறிவாளிகளும் உண்டு.

4. உன் பெயரைக் கேட்டு வெறுப்போரும் ஆயிரக் கணக்கில் உண்டு.

5. அப்படியிருந்தும், உன் கருணைமழை அனைத்தும் அவர்கள் மாளிகைகளின்மீது தானே பொழிகின்றது!

6. ஆனல், உன் கோப இடி விழுவதெல்லாம் கதியற்ற முஸ்லிம்கள் பேரில்தானு?

## 15

1. முஸ்லிம்கள் தொலைந்தார்கள் என்று விக்ர கங்களை வணங்குவோர் கூறுகின்றார்களே!

2. கஅபாவின் பாதுகாவலரான முஸ்லிம்கள் மறைந் தார்களென்று மகிழ்ந்து துள்ளுகிறார்களே!

3. வனைந்தர ஒட்டகமோட்டிகள் உலகினின்றும் சீர்குலைந்தனரென்றும்,

4. குர்ஆனைத் தங்கள் கக்கத்திலே இடுக்கிக் கொண்டு மறைந்தனரென்றும், மகிழ்கிறார்களே!

5. உன்னை நிராகரிப்போர் அகமகிழ்வது உனக்குத் தெரியவில்லையா?

6. உன்னுடைய தவ்ஹீதின்[1] கவலை உனக்கு இருக்கிறதா, இல்லையா?

---

1. தவ்ஹீத்—ஏக தெய்வக் கொள்கை.

## 16

1-2. சபை நடுவே நின்று உரையாடும் திறமை யற்ரோரது கருவூலங்களை நீ நிறைத்துவிட்டாயே, என்று உன்மீது நாங்கள் குறை கூறவில்லை.[1]

3-4. மாண்பனைத்தும் உன்னை நிராகரிப்போருக்கே இவ்வுலகினிலே அளித்துவிட்டு, கதியற்ற முஸ்லிம் களுக்குமட்டும் மறுஉலகில் ஹூர்கள்[2] கிடைப்பார் களென்று வாக்குறுதி அளிப்பது நீதியாகுமா?

5. நீ எங்கள்மீது சொரிந்த அந்தப் பழமையான அன்பும் அருளும் இப்பொழுது எங்கே?

6. அந்தக் காலத்திலே, நீ எங்களுக்குக் காட்டிய கருணையும், கொடையும் இப்பொழுது ஏன் எங்களுக்கு இல்லாமற் போய்விட்டன, என்பதுதான் தெரியவில்லை!

---

1. முஸ்லிமல்லாதாருக்கு செல்வங்கள் அனைத்தையும் நீ கொடுத்துவிட்டாய் என்று நாங்கள் உன்னிடம் முறையிடவில்லை. குர்ஆன். 44:5, 12:35.

2. ஹூர்=ஆன்மீகத் தோழி. குர்ஆனில் இது உருவக மாகக் கூறப்பட்டிருக்கிறது.

## 17

1. உலகச் செல்வங்களெல்லாம் இப்போது முஸ்லிம் களுக்கு ஏன் அரிதாகிவிட்டன ?

2. உனது அருட்கொடையோ எல்லையற்றது ! எண்ண முடியாதது !

3. நீ விரும்பினல், கொடும் பாலைவனத்தின் நடுவிலும் குளிர்ந்த நீரூற்றுக்கள் பிறக்க முடியுமே !

4. நீ விரும்பினல் மணல் வெளியில் காணப்படும் கானல் நீரின் பொய்த்தோற்றம், மெய்யாகவே தண்ணீராக மாறிவிடுமே! அதன் அலைகள் வனந்தரப் பிரயாணிகளோடு விளையாடுமே ![1]

5. பகைவர் வசைமாரி பொழிகிருர்கள் ; ஏமாற்றம் அடையும்படிச் செய்கிருர்கள் ; நாங்கள் சீரழிந்து சிறப்பழிந்து பஞ்சைகளாயினேம் !

6. உனது நாமத்திற்காக உயிரை அர்ப்பணஞ் செய்வோரான எங்களுக்குத் துன்பமும் துயரமுந்தானு வெகுமதி ?

---

1. பாலைவன மணல்வெளியிலே சூரியனுடைய கதிர்கள் தாக்கும்பொழுது, வெகுதூரத்திலிருந்து தண்ணீரின் அலைகள் துள்ளி விளையாடுவதுபோலத் தோன்றும். ஆனல், அது உண்மைத் தோற்றமன்று. பிரயாணி அங்கு சென்ருல், உண்மையில் நீர்த்தேக்கம் இராது ; ஏமாற்றமடைவான். இறைவன் விரும்பினல் பாலைவனமும் நீர்த்தேக்கமாக மாறி, அதில் அலைகள் பிறந்துவிடும் என்பது கருத்து.

## 18

1. மற்ருேர் விரும்பியதையெல்லாம் இவ்வுலகம் கொடுக்கிறது !

2. எங்களுக்கோ கனவைப்போன்ற காட்சிகளே கிடைக்கின்றன !

3. எங்கள் ஆதிக்கம் மறைந்தது. எங்களை விரும்பாதோர் உலகை ஆண்டு வருகிருர்கள்.

4. பிறகு, ஏகத்துவம் உலகில் இல்லையே என்று இறைவா ! நீ குறை கூருதே.

5. உன் உயர் நாமம் நிலைப்பதற்காகவே நாங்கள் உலகினிலே உயிர் வாழ்கின்ருேம்.

6. தெய்வீகக் காதல் என்ற கனிரசக் கோப்பையை வழங்குவோர் இல்லாமல், அந்தக் கோப்பை மட்டும் எவ்வாறு இருக்க முடியும் ?[1]

---

1. முஸ்லிம்கள் அழிந்தபின் இவ்வுலகில் இஸ்லாம் இருக்க முடியுமா ? நாங்கள்தானே இஸ்லாத்திற்காக வாழ்கிருேம்.

"ஆண்டவனே ! இந்தச் சிறுதொகையினர் (முஸ்லிம்கள்) இன்று அழிந்துவிட்டால், உலகம் முடியும்வரை உன்னையே வணங்குவோர் ஒருவரும் இருக்கமாட்டார்கள் !" என்று பத்ர் போரிலே நபிகள் நாயகம் (ஸல்) இறைவனிடம் பிரார்த்தனை புரிந்ததை நாம் மறந்துவிடக்கூடாது.

## 19

1. இவ்வுலகில் உன்னுடைய தர்பாரும் இராது. உன்னை விரும்பி வணங்குவோரும் இருக்கமாட்டார்கள்! [1]

2. நள்ளிரவில் உனது வணக்கத்திலே ஈடுபட்டோருடைய பெருமூச்சுகளையும், விடியற்காலையில் விம்முகின்ற குரல்களையும், நீ இனிமேல் கேட்க முடியாது! [2]

3. அவர்கள் தங்கள் உள்ளங்களை உன்னிடத்தே ஒப்படைத்துச் சென்றுவிட்டார்கள். அதற்குரிய வெகுமதியையும் பெற்றுச்சென்றுர்கள். [3]

4. அவர்கள் உன் உலகில் வந்து உட்காருவதற்குள் இங்கிருந்து வெளியேற்றப்பட்டுவிட்டார்கள்.

5. அவர்களோ, உனது அன்பையும் அருளையும் நாடிவந்தார்கள். ஆனுல், மறுமையில் இன்பம் கிடைக்கும் என்று அவர்களுக்கு உறுதிகூறி, நீ துரத்திவிட்டாய்!

6, இன்றைய இருளடைந்த உலகிலே உனது அழகான விளக்கைக்கொண்டு அத்தன்மையோரைத் தேடிப்பார்த்தாலும் நீ காண்பதரிது.

---

1. உன்னைப் போற்றும் இஸ்லாமிய அரசாங்கங்கள் மறைந்துவிட்டன. இப்பொழுதுள்ள முஸ்லிம் அரசாங்கங்கள் எல்லாம் பகைவரது ஆதிக்கத்திலே இருக்கின்றன. இப்பொழுது ஹாரூன்-அர்-ரஷீத், நூருத்தீன் ஜங்கீ, அலப் அர்ஸலான், ஸுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி, முஹியுத்தீன் ஆலம்கீர், டீப்பு ஷஹீத் இவர்களெல்லாம் இல்லை.

2. அலீ ஹஜ்வீரீ (ரஹ்), முயினுத்தீன் அஜ்மீரி, பஹாவுத்தீன் ஜக்கரிய்யா மூல்தானீ, பரீதுத்தீன் கஞ்ச் ஷகர், மியான் மீர் போன்ற நடுநிசியில் இறைவணக்கத்தில் மெய் மறந்து ஆழ்ந்துவிடும் ஆன்மீகத் தலைவர்கள் இப்பொழுது இல்லை.

3. உன் காதலில் அவர்கள் தங்களை அர்ப்பணித்து (அழித்து) விட்டார்கள். அதற்கான வெகுமதியும் அவர்கள் பெற்றுர்கள்! நீ அவர்களை என்றும் வாழ்வோரான "ஜாவீத்" ஆக்கிவிட்டாய்.

## 20

1. லைலாவின்[1] காதல் நினைவு என்றும் அதே நிலைமையில் இருக்கிறது. மஜ்னூனுடைய காதலும் மாறாமல் இருக்கிறது.[2]

2. நஜ்து நாட்டின் குன்றுகளிலும் காடுகளிலும் கலைமான்கள் இன்றும் வழக்கம்போல் துள்ளிவிளையாடுகின்றன.[3]

3. காதலுள்ளமும் வேறுபடாமல் இருக்கிறது. அழகின் மாயா ஜாலங்களிலும் வேறுபாடொன்றும் உண்டாகிவிடவில்லை.[4]

4. பெருமானாரின் பெருவழி நடப்போரும் பிசகிடவில்லை. நீயும் எப்பொழுதும்போல் அப்படியே இருக்கிறாய்.

5. இப்படியிருந்தும், காரணமில்லாமல் உனது சொந்த அடியார்களினின்றும் நீ ஏன் விலகிக்கொண்டாய்?

6. உனக்காக உயிரையும் அர்ப்பணஞ்செய்வோரை ஏன் இவ்வாறு கனற்பொறி தெறிக்கப் பார்க்கிறாய்?

---

1. லைலா—மஜ்னூன் என்ற காதலியும் காதலனும் அரப் நாட்டிலே நஜ்த் என்னும் மாகாணத்திலே இருந்ததாக ஒரு கதையுண்டு. லைலாவின்மீது காதல்கொண்ட மஜ்னூன் பைத்தியங்கொண்டு அலைந்தான். அவளது காதலில் மூழ்கிய மஜ்னூன் எதைச் செய்யவும் சித்தமாக இருந்தான்.

2. முஸ்லிம்களின் உள்ளத்திலே நபிகள் நாதர்மீதுள்ள நேசம் மாறாமல் அப்படியே இருக்கிறது.

3. இறைகாதல் வேட்கை நிலையும் அப்படியே இருக்கிறது.

4. மக்கள் உள்ளங்களைத் தன்பக்கம் இழுக்கும் தன்மை இஸ்லாம் மார்க்கத்தில் குறைவின்றி நிறைந்து நிற்கின்றது.

## 21

1. உன்னை நாங்கள் மறந்தோமா? உன் தூதர் நபி பெருமானாரை நாங்கள் பின்பற்றவில்லையா?

2. விக்ரக வணக்கத்தை நாங்கள் மேற்கொண்டோமா? விக்ரக நிக்ரஹத்தில் நாங்கள் சிறிதேனும் பின் வாங்கினோமா?

3. உன்மீதுள்ள காதலையோ, காதல் துடிப்பையோ நாங்கள் விட்டோமா!

4. ஸல்மான்[1], உவைஸ் கரனீ[2] முதலியோர் பின்பற்றிய இறைகாதல் முறைகளை நாங்கள் மறந்தோமா?

5. எங்கள் நெஞ்சத்திலே தக்பீரின் அதே நெருப்பு இன்னும் எரிந்துகொண்டிருக்கவில்லையா?

6. எங்கள் வாழ்க்கையானது உனக்காக எத்தனையோ துன்பங்களைச் சகித்த பிலாலின்[3] வாழ்க்கையை முன்மாதிரியாகக் கொண்டதல்லவா?

---

1, 2, 3. **ஸல்மான் பார்ஸி, உவைஸ் கரனீ, பிலால்** இம்மூவரும் நபி பெருமானவர்கள் காலத்திலிருந்த சிறந்த முஸ்லிம்கள். தெய்வ வழிபாட்டிலும், பெருமானாரவர்களது ஸுன்னத்தைப் பின்பற்றுவதிலும் முதன்மையானோர்.

## 22

1. நாங்கள் உன்னை முன்போல உவப்பதில்லை என்றே வைத்துக்கொள்வோம்!

2. நாங்கள் நேர்வழி தவறி, தீ நெறியிற்சென்று விட்டோமென்றும் வைத்துக்கொள்வோம்!

3. நிலையற்ற எங்கள் மனமானது உன் கிப்லாவை நோக்கும் வழக்கத்தில் தளர்ந்து விட்டதென்றும் வைத்துக்கொள்வோம்!

4. விசுவாசிகள் அனுசரிக்கும் விதிகளை நாங்கள் அனுசரியாமல் விட்டுவிட்டோமென்றும் வைத்துக்கொள் வோம்!

5. ஆனல், இறைவா! நீயோ சில சமயம் எங்களுடனும், சில சமயம் பிறருடனும் நேசமாயிருக்கிருயே!

6. ஒரே இடத்தில் நிலையின்றி, அங்குமிங்கும் அசைந்தாடிக்கொண்டிருக்கிருயே! என்று நாவால் சொல்லவும் எங்களுக்கு நாணமாயிருக்கிறதே![1]

---

1. எங்கள் முன்னேர்களைவிட நாங்கள் இறை நேசத்தில் குறைந்துவிட்டோமென்று ஒப்புக்கொள்ளுகிறேம். இறைவனுக்கு இணங்கி நடக்கும் குணத்தில் அவர்களைவிடப் பின்னடைந்து விட்டோமென்றும் ஏற்றுக்கொள்ளுகிறேம். இஸ்லாமிய ஷரீஅத்தை முழுமனதுடன் பின்பற்றவில்லை என்பதும் ஒருவாறு உண்மையே. ஆனல் — ஆ! சொல்லவும் நா எழவில்லையே!—சிலகாலம் எங்களுடனும் சிலகாலம் பிறருடனும் நீ நேசமாய் இருக்கிருயே! இந்த இரகசியந்தான் என்னவென்று எங்களுக்குப் புரியவில்லை.

# 23

1. பாரான் மலை [1] உச்சியிலே உன் பேரருள் மார்க்கத்தை நீ பூர்த்தியாக்கினாயே!

2. ஒரு சிறு சமிக்ஞையில் பல்லாயிர மக்களை உன் சொந்த அடியாராக்கி விட்டாயே!

3. உன் அழகெனும் ஒளிப் பிழம்பினால் எண்ணற்ற உள்ளங்களுக்கு ஒளியூட்டிவிட்டாயே!

4. உனது அன்பெனும் இன்ப இளங்காற்றை உலகினில் மக்களிடையே உலவச் செய்தாயே!

5. அப்படியிருந்தும், இன்று எங்கள் நெஞ்சங்கள் உனது அன்பெனும் புனிதச் சுடர்களால் ஏன் நிரம்பவில்லை?

6. எங்கள் உள்ளங்களோ துக்கத்தில் எரிந்து போய்க் கிடக்கின்றன. இதனை நீ மறந்துவிட்டாயா?

---

1. பாரான் (Faaraan) மக்கா நகரின் அருகில் ஒரு குன்று. பாரான் மலையின் உச்சியிலிருந்து இஸ்லாமிய சூரியன் உதயமாயிற்று. மேலும், இந்த இஸ்லாம் மார்க்கத்தை நீ பூர்த்தி செய்தாய். (குர்ஆன் 5:3). இதன் பலனாக லக்ஷக்கணக்கான மக்கள் இஸ்லாத்தின் மேன்மைகளைக்கண்டு அதில் சேர்ந்துகொண்டார்கள். அவர்களது உள்ளத்திலே இறை காதல் என்னும் ஜோதியை பெருமானாரவர்கள் உண்டாக்கி விட்டார்கள். இதன் பலனாக இப்பெரியார்கள் இஸ்லாத்தின் பக்கமாக உலகை இழுத்தார்கள். நாங்களும் இந்த முஸ்லிம்களின் வழிவந்தோரே! அப்படியிருந்தும் எங்கள் மனதில் ஏன் அந்த நெருப்பு அணைந்துவிட்டது?

## 24

1. நஜ்து நாட்டின் பள்ளத்தாக்குகளில் கைதிகளின் தலையோசை இல்லாமற் போயிற்று.[1]

2. தனது காதலி லைலாவின் ஒட்டகத்தின்மீது உள்ள அம்பாரியின் காட்சியைப் பார்க்கும் பைத்தியத்தில், மஜ்னூன்[2] அங்கு அலைந்து திரிவதில்லை.

3. எங்கள் ஆசைகளும் முயற்சிகளும் இன்று குறைந்துவிட்டன. நாங்களும் இல்லை. எங்கள் மனமும் இல்லை.

4. எங்கள் இல்லங்கள் பாழாகிவிட்டன. ஏனென்றால், உன்னுடைய ஜோதி அங்கு ஒளிவிடவில்லை.

5. இறைவா! நீ பெரிய மாட்சிமையுடனும், பெருமிதத்துடனும் தாராளமாக இறைகாதலர் கூட்டத்தில் மறுபடியும் வந்து சேரும் நாளானது எவ்வளவு மங்களகரமான நாளாகும்!

6. எத்தகைய கூச்சமுமின்றி நீ எங்களை நோக்கி வந்து சங்கையுடன் சந்திப்பாயாக![3]

---

1. இறைகாதலர் அங்கு ஒன்றுசேர்வதில்லை.

2. மஜ்னூன் = கைஸ் = இறைகாதலர்; முஸ்லிம்.

3. முஸ்லிம்கள் நபிகள் நாதரிடம் கொண்டிருந்த அந்த நேச உணர்ச்சி இன்றில்லை. இப்பொழுது இஸ்லாத்திற்காக முஸ்லிம்கள் பெருந்தியாகம் செய்வதில்லை. முன்போல இஸ்லாத்தை நேசிப்பதுமில்லை. மெய்யாகவே இன்று எங்களிடம் வீரமும் துணிவும் இல்லை. இதன் காரணந்தானென்ன? நீ மறுபடியும் எங்கள்மீது ஒரு கருணைப்பார்வை அளித்து, எங்கள் சபைக்கு வந்து அருள்புரிவாயாக!

## 25

1. சிங்காரப் பூங்காவின் சிற்ருேடைக் கரையினிலே, மது அருந்தி மகிழ்வோர் அனைவரும் பிறரே!

2. கையில் மதுக்கிண்ணத்துடன் கூ! கூ! என்ற குயிலின் கீதத்தைக் கேட்டு அவர்கள் ஆனந்திக்கின்றனர்![1]

3. நாங்களோ, பூந்தோட்டத்திலுண்டாகும் ஆரவாரங்களிலிருந்து ஒதுங்கியிருக்கிறோம்.

4. இறைகாதல் என்னும் பைத்தியம் பிடித்த முஸ்லிம்கள், "ஹூ"[2] என்ற சொல்லிற்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம்.

5. உன் இறைபக்தர்களான விட்டில்களுக்கு இறைகாதல் என்னும் நெருப்பில் எரிந்து, உனக்காகத் தங்களை அர்ப்பணம் செய்யும் சக்தியைக் கொடுப்பாயாக!

6. எங்கள் உள்ளங்களில் அணைந்துபோய்விட்ட இறைகாதல் நெருப்பை உனது மின்னல் மூலமாகப் புத்துயிர் பெறச் செய்வாயாக!

---

1. முஸ்லிமல்லாதாரெல்லாம் உலகில் சகல இன்பங்களையும் அநுபவிக்கிறார்கள்.

2. ஹூ = அவன் = அல்லாஹ் = முஸ்லிமுடைய உள்ளத்தில் ஆண்டவன் அருளால் பிறக்கும் இறைகாதலின் அக இயக்கம். மேலும், "லா இலாஹா இல்லல்லாஹு" என்பதன் சுருக்கமே "ஹூ" என்பதாகும். இது ஒரு சமிக்ஞைச் சொல்லாக மாறிவிடுகிறது. முஸ்லிம் மெய்ஞ்ஞானிகள் (ஸூபிகள்) இரவில் ஒன்றுகூடி தியான மன்றத்திலே, தலைவர் "ஹூ!" என்றவுடன் இறைவனது தியானத்தில் மூழ்கிவிடுவார்கள். முஸ்லிம்கள் இறையருளை எதிர்பார்த்தவர்களாக இருக்கிறார்கள் என்பது பொருள்.

இறைவனே! இன்றைய உலகிலே முஸ்லிமல்லாதார் சுக போக வாழ்க்கையிலே இன்புற்றிருக்கிறார்கள். ஆனால், முஸ்லிம்களோ, இழிநிலையில் இருந்துகொண்டு, உனது கருணைப் பார்வையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இறைவா! நீ எங்கள்மீது கருணை புரிவாயாக! மறுபடியும் எங்கள் உள்ளத்திலே உன்மீது காதல் விளைவிக்கும் நெருப்பை உண்டாக்கு!

## 26

1. அறியாமையின் காரணமாகத் தீநெறியில் சென்றுகொண்டிருக்கும் முஸ்லிம் இனத்தாரின் குதிரைக் கடிவாளங்களை ஹிஜாஸ்[1] திசையை நோக்கித் திருப்பி விடுவாயாக!

2. இறகில்லாத புல்புல் பறவைக்குப் பறக்கும் ஆற்றலை இனிதாகக் கற்பிப்பாயாக!

3. தோட்டத்திலுள்ள ஒவ்வொரு முகையிலும் மறைந்திருக்கும் நறுமணமானது அங்கிருந்து வெளிக் கிளம்பத் துடித்துக்கொண்டிருக்கிறது.

4. இறைவனே! நீ கொஞ்சம் தட்டிவிடு! உடனே, இயங்குவதற்கு வீணை காத்துக்கொண்டிருக்கிறது![2]

5. வீணையின் தந்திகளிலிருந்து கிளம்புவதற்காக, பண்கள் பேராவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக் கின்றன.

6. (மூஸா நபி ஆண்டவனுடைய மெய்யொளியைக் கண்ட) தூர் மலையானது உனது அன்பாகிய அனற் பிழம்பில் எரிந்து சாம்பலாகக் காத்துக்கொண்டிருக்கிறது.[3]

---

1. ஹிஜாஸ்—மக்கா, மதீனா என்ற இஸ்லாமிய புனித நகரங்கள் உள்ள நாடு.

2. உனது நாமத்திற்காக உயிரையும் அர்ப்பணஞ் செய்ய முஸ்லிம்கள் மறுபடியும் ஆயத்தமாக இருக்கிறார்கள். உனது கிருபை நிறைந்த பார்வையை நீ ஒருமுறை எங்கள் பக்கம் செலுத்துவாயாக.

3. இறைவா! முஸ்லிம் இனம் தனது பிழையை நினைத்து வெட்கப்படுகிறது. மறுபடியும், நாங்கள் உன் பக்கம் தலை சாய்க்கிறோம். எங்களிடம் செல்வமும் சக்தியும் இல்லாவிட்டாலும், முன்னேறும் ஆவேசம் இருக்கிறது. (இறக்கை இல்லையெனினும் பறக்கும் ஆர்வம் உண்டு.) இந்த இனத்தின் ஒவ்வொரு (முகை) நபரின் மனதிலே, நபிகள் நாதர் நேசம் இருக்கிறது. உனது கிருபா நோக்கு எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு நீ செய்தால், மறுபடியும் உன் பாதையிலே உயிர்த்தியாகஞ் செய்ய முஸ்லிம்கள் ஆயத்தமாகிவிடுவார்கள். இனம் முழுமையுமே (தூர் மலை) உன் பாதையில் உயிரிழக்க ஆயத்தமாக இருக்கிறது.

## 27

1. இறைவா! உனது புனித இனத்தாரது துன்பத்தை எளிதாக்குவாயாக!

2. அற்பமான எறும்பை[1] ஸுலைமானுக்குச்[2] சமமாக்கி விடுவாயாக!

3. கிடைத்தற்கரிய உன் நேசத்தை மறுபடியும் எங்களுக்கு எளிதாக்கித் தருவாயாக!

4. இந்தியாவின் கோயில்களில் உள்ளோரை[3] முஸ்லிம்களாக்குவாயாக!

5. நீண்டகாலமாக நிறைவேறு நிற்கும் எமது ஆவல்களெல்லாம் எமது இரத்தத்தை உறிஞ்சுகின்றன!

6. புண்பட்ட எங்களது நெஞ்சங்களெல்லாம் காயங்களின் நோவால் துடித்துக்கொண்டிருக்கின்றன.[4]

---

1. எறும்பு = முஸ்லிம் இனம்

2. ஸுலைமான் = நபித்துவம், அரசாங்கம் இவ்விரண்டும் இந்த இறை தூதருக்கு இறைவனால் அளிக்கப்பட்டன. ஒரு சமயம் அரச பரிவாரங்களுடன் ஹஸ்ரத் ஸுலைமான் நபி செல்லும்பொழுது, வழியில் ஓர் எறும்பு பயந்து முறையிடுவதைக் கேட்டு, எறும்புகள் செல்லும் பாதையிலிருந்து விலகி அவற்றைக் காப்பாற்றினர்.

3. இந்தியாவின் கோவில்களில் உள்ளோர் = இதை ஹிந்து என்றாவது விக்கிரக வணக்கக்காரர் என்றாவது பொருள் செய்யலாகாது "திரு நபியார் காட்டிய பெருவழியை மறந்து, நடைமுறையில் ஹிந்துவாயும், விக்ரக வணக்கத்தாராயும் ஆகி விட்ட முஸ்லிம்கள்" என்று பொருள்.

4. இறைவனே! எங்கள் துன்பங்களை நீக்குவாயாக! இன்று வறுமையிலும் இழி நிலையிலும் இருக்கும் எங்களை, ஸுலைமானுடன் சம அந்தஸ்தில் உயர்த்திவிடு! எங்கள் மனதில் நபிநேச நெருப்பை உண்டாக்கிவிடுவாயாக! பெயரளவில் முஸ்லிம்களாக இருக்கும், எங்களை உண்மையான முஸ்லிம்களாக்கி விடுவாயாக! இறைவா! இன்று எங்கள் உள்ளங்கள் அளவு கடந்த ஏமாற்றங்களால் நிறைந்திருக்கின்றன, அவற்றினின்று ஏமாற்றம் என்ற இரத்த ஓடைகள் ஓடுகின்றன. அதாவது நாங்கள் மனத்தளர்ச்சியுற்று நம்பிக்கை இழந்து, இறைநேச வேட்கையின் உருவாக நிற்கிறோம். நூற்றுக் கணக்கான காயங்கள் நிறைந்த எங்கள் நெஞ்சங்களிலிருந்து முறையீட்டுக் குரல்கள் கிளம்புகின்றன.

## 28

1. பூஞ்சோலையின் இரகசியத்தை பூவின் நறுமணம் பூந்தோட்டத்திற்கு வெளியே கொண்டுபோய் விட்டதே!

2. என்ன அநியாயம்! பூங்காவிற் பிறந்த பூக்களே அதன் துரோகிகளாகி விட்டனவே!

3. பூக்கள் மலருங்காலம் முடிவடைந்துவிட்டது. எனவே, இப்பொழுது தோட்டத்தின் இசைக்கருவியும் உடைந்துவிட்டது!

4. கிளைகள்மீது உட்கார்ந்திருந்த, பாடும் பறவைகள் அனைத்தும் பறந்து விட்டனவே![1]

5. ஆனால், இன்றுவரை ஒரேயொரு புல் புல் பறவை[2] தனிமையாக பூஞ்சோலையிலே தனது இசையில் மூழ்கி உட்கார்ந்துகொண்டே இருக்கிறது.

6. இந்த புல்புல் நெஞ்சத்தில்தான் இன்றுவரை இன்னிசையின் ஆவேச உணர்ச்சியின் அலைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன.[3]

---

1. இஸ்லாமிய தியாகிகள் 1858-ல் சிப்பாய்க் கலகத்தில் ஒவ்வொருவராக உயிர் கொடுத்தார்கள்.

2. புல்புல் = கவிபாடுவோன் - அல்லாமா இக்பால் என்ற ஒரு கவியே தமது கவிதைகளின் மூலமாக முஸ்லிம்களைத் தட்டி எழுப்புகிறார்.

3. இனி, கவிஞர் தமது உள்ளத்துடன் உரையாடுகிறார்—பரிதாபம்! முஸ்லிம்களே தங்கள் இனத்தின் பலவீனத்தை முஸ்லிமல்லாதாருக்குத் தெரிவித்துவிட்டார்கள்! மீர் ஜாபர், மீர் ஸாதிக் போன்றவர்கள் முஸ்லிம்களாயிருந்து இஸ்லாமுக்குப் பலவீனத்தை உண்டாக்கினார்கள். இத்தகைய நய வஞ்சகர், சதிகாரர் காரணமாக இஸ்லாமிய தோட்டம் சீரழிந்து விட்டது. இஸ்லாமிய அரசியலும் முடிவடைந்தது. முஸ்லிம் இனம் அடிமையாகிவிட்டது. அப்பால், தியாகிகள் பலர் மறைந்தார்கள். அத் தோட்டத்திலே ஒரே ஒரு குயில் தங்கிவிட்டது. அதுதான் பாடிக்கொண்டிருக்கிறது.

இந்த முறையீடு முழுதும் குறிப்பாய் உள்ளுணர்த்தும் கருத்துக்கள் பொதிந்த கவிதைகள் நிறைந்தது. எனினும் இந்த 28,29,30,31 நான்கு இறுதிப்பாடல்களில் அதன் சாரம் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இவற்றின் சொற்பொருளை விட்டு அகப்பொருளைக் கொள்ளவேண்டும்.

## 29

1. ஸனூபர் மரத்தின் கிளைகள் எழுந்தோங்கி பூத்துச் சொரியும் புனிதக் கிளைகளிலிருந்து மணிப் புருக்கள் பறந்தோடி விட்டன !

2. வாச மலர்களின் இதழ்கள் விழுந்து நாற்புறமும் சிதறிக் கிடக்கின்றன !

3. பூங்காவின் பழமையான பெரும்பாதைகள்[1] பாழாகிக் கிடக்கின்றன !

4. கிளைகளின் பசுமையான இலைகளெல்லாம் உதிர்ந்து, ஒவ்வொரு கிளையும் நிர்வாணமாய் நிற்கிறது !

5. தனிமையாகப் பாடிக்கொண்டிருக்கும் பாடகனே, வசந்தகாலம் கழிந்துவிட்டதையும் கவனிக்காமல், தனது கருத்துப் பாடலில் ஆழ்ந்திருக்கிறான் !

6. அலை பாயும் அவன் உள்ளத்தின் முறையீட்டை அப் பூஞ்சோலையில்[2] கேட்போர் எவரேனும் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் ![3]

---

1. முஸ்லிம்களின் தனிச்சிறப்புகள், இஸ்லாமிய உயர்வுகள்

2. பூஞ்சோலை—(முஸ்லிம்) இனம்

3. 1. முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம்களுக்காக பாடுபடுவதை விட்டுவிட்டு அரசாங்க சேவைசெய்ய ஆரம்பித்துவிட்டார்கள். 2. தலைவர்களது இந்த சுயநலமும் மனச்சாட்சியை விற்றலும் மக்களின் அழிவுக்கும் இழிவுக்கும் காரணமாயிற்று. 3. முஸ்லிம்களது கலாச்சாரமும், நாகரிகமும், தொழில்களும் முடிவடைந்தன. 4. தங்கள் இலக்கியங்கள், கலைகள், முதலியவற்றிலிருந்து முஸ்லிம்கள் வெகுதூரம் சென்றுவிட்டார்கள். 5. எனினும், இக்பால் மட்டும் மாறவில்லை. அவர் தொடர்ச்சியாக முஸ்லிம் இனத்தாரிடம் தமது தூதைச் சமர்ப்பித்துக் கொண்டிருந்தார். 6. முஸ்லிம்கள் இக்பாலுடைய கவிதைகளை வாசித்து ஆராய்ந்தால் நன்றாயிருக்கும்.

## 30

1. இறந்து போவதிலேயே இன்பம் இருக்கிறது. உயிர் வாழ்வதில் என்ன உயர்வு இருக்கிறது?

2. ஏதாவது இன்பம் இருக்கிறதென்ருல், துன்பக் கடலில் மூழ்கி, உள்ளத்தின் உதிரத்தை உறிஞ்சிக்கொண் டிருப்பதிலேயே [1] இருக்கிறது.

3. என் ஆவியாகிய கண்ணுடியிலே, [2] எத்தனையோ முத்துக்கள் [3] துடித்துக்கொண்டிருப்பதைக் காணலாம்.

4. எனது நெஞ்சத்திலே எத்தனையோ விதமான மனவெழுச்சிகளும் பேராவல்களும் வெளிக் கிளம்பக் காத்துக் கொண்டிருக்கின்றன!

5. ஆனல், இந்தப் பூங்காவிலே என்னைக் கண் ணெடுத்துப் பார்ப்போரும் இலரே!

6. என் இதய வடுக்களைக் கண்டு இரக்கங்கொள்ள இத் தோட்டத்தில் "லாலா" [4] போன்ற வடு மலர் யாது மில்லையே!

---

1. துக்கப் பாடல் பாடுவதிலே
2. கண்ணுடி = உள்ளம்
3. முத்துக்கள் = உள்ளத்தின் ஆவேச உணர்ச்சிகள்
4. பூவரசுப்பூ போன்றதொரு வடுக்கள் உள்ள மலர்.

1. முஸ்லிம் இனம் பிணமாகிக் கிடக்கிறது, இஸ்லாமியப் பற்றும் இன உணர்ச்சியும் அதற்கில்லை. எனவே, இருப்பதிலும் இன்பமில்லை. இறப்பதிலும் ருசியில்லை. 2. ஆகவே, அல்லும் பகலும் உள்ளத்தின் உதிரத்தை உரிஞ்சுகிறேன். துக்கக் கடலில் மூழ்கிவிடுகிறேன். 3. முஸ்லிம் இனத்தின் இழி நிலையைக் கண்டு இரங்குகிறேன். பரிதாபப்பட்டுக் கண்ணீர் விடுகிறேன். 4. என் நெஞ்சத்திலே நூற்றுக் கணக்கான ஆவேச உணர்ச்சி களும் திட்டங்களும் இருக்கின்றன, அவை விளம்பரப் படுவதற் காக வெளிவரத் துடிதுடித்துக் கொண்டிருக்கின்றன. 5. ஆனல், அவற்றை அறிந்து மதிப்போர் நமது இனத்திலே இல்லை. 6. முஸ்லிம் இனத்தின் மனதிலே இஸ்லாமிய சமுதாய முன் னேற்றக் கவலை ஏதாயினும் இருந்தால்தானே, துக்கமும் அனுதாபமும் நிறைந்த கவிஞனுடைய ஆவேச உணர்ச்சிப் பாடல்களை அறிந்துகொள்ளும் திறமை இருக்கும்!

## 31

1. தனிமையாகப் பாடும் புல்புல்[1] பறவையின் துயர் நிறைந்த பாடலானது கேட்போர் மனதைப் பிளந்து சென்று, அவர்களைத் தூக்கத்தினின்று தட்டி எழுப்பாதா?

2. இந்த மணியோசையைக்[2] கேட்டு, இன்னும் தூக்கத்திலிருப்போர் எழுந்து பயணத்தை ஆரம்பிக்கமாட்டார்களா?

3. அதாவது, மறுபடியும் இறைவனிடம் புதிய விசுவாசப் பிரமாணஞ்செய்து, மக்கள் மனம் புத்துயிர்பெறுதா?

4. மறுபடியும், அதே பழைய ஏகத்துவ மதுத்தாகம் அவர்கள் உள்ளத்திலே உண்டாகாதா?

5. மதுக்கிண்ணம் அந்நிய நாட்டைச் சேர்ந்ததானால் அதனால் ஏற்படும் இழுக்கென்ன? என்னுடைய மதுவோ ஹிஜாஸைச் சார்ந்ததே!

6. பாடகன் பாரதத்தில் பிறந்தாலென்ன? என் இசையின் பண் ஹிஜாஸைச் சேர்ந்ததே!

---

1. புல்புல் = அல்லாமா இக்பால் 2. மணியோசை = மறுமலர்ச்சி

(கருத்து) இறைவா! ஒதுக்கிடத்தில் நான் பாடும் கவிதையைப் படித்து முஸ்லிம்களின் உள்ளம் உயர்வடைந்து நற்பயன் பெறும்படியான உணர்ச்சியை அவர்களுக்கு ஊட்டுவாயாக! 3. அவர்கள் மறுபடி உன்னிடம் விசுவாசப் பிரமாணம் செய்யும்படி அருள் செய்வாயாக! 4. அதனால் அவர்களுடைய இதயங்களிலே இஸ்லாத்தினுடையவும், குர்ஆன் உடையவும் நேசம் உண்டாகுமாறு உதவி செய்தருள்வாயாக! (5-6) நான் என் தூதை இந்த உர்து கவிதை மூலமாகச் சமர்ப்பித்தால் இழுக்கில்லை. இந்தத் தூதின் சாரமானது குர்ஆனிலிருந்து எடுக்கப்பட்டதாகும். எனது குறிக்கோள் இஸ்லாமிய போதனைதான்.

"பாடகன் இனிய சங்கீத கானத்தைக் கிளப்பினான். புல்லாங்குழல் வாசிப்பால் உற்சாக உணர்ச்சியுள்ள சிந்தனையாளரின் காதல் நெருப்பைப் பெருக்கினான்.

அந்தப் பாடகன் ஞாபகமானது எங்களது மற்றெல்லா ஞாபகங்களையும் ஒழித்துவிட்டது. புல்லாங்குழலின் இன்னிசை நாதமானது எங்களது எண்ணமாகிய அலைகளை அழித்துவிட்டது.

பாட்டுக்களை ரசிக்கும் இன்பம் மந்தபுத்தி யுடையோருக்கு இருப்பதில்லை. இல்லையெனின் இந்த இராக சல்லாபம் உலகத்தையெல்லாம் நெருப்பைப்போலப் பற்றிக்கொண்டிருக்கும்."

(மௌலானா ஜாமீ. ரஹ்)

# 2. மறுமொழி

(ஜவாபே ஷிக்வா)

# இறையோன் விடை

## 1

1. உள்ளத்திலிருந்து உதித்தெழுகின்ற சொல்லானது பயன் அளிக்கத் தவறுவதில்லை.

2. அதற்கு இறக்கை கிடையாது. ஆனால், பறக்கும் ஆற்றலுண்டு. [1]

3. எக்காலமும் அது புனிதம் வாய்ந்தது. விண்ணுலகிலேயே அது விழியைச் செலுத்துகின்றது.

4. மண்ணுலகிலிருந்து அது கிளம்புகின்றது. வானுலகில் வலம் வருகின்றது.

5. எனது இறைகாதலானது புரட்சியுண்டாக்குவதாகவும் தீட்சண்யமுள்ளதாகவும் இருந்தது.

6. அச்சமற்ற என் குற்றச்சாட்டு வானத்தைப் பிளந்துகொண்டு சென்றுவிட்டது.

---

1. இறைவன்மீதுள்ள காதல் என்னும் பாசக் கயிறு எங்களுக்கு இறகும் இறக்கையுமாக உதவுகிறது. மஸ்னவி 1:43.

## 2

1. எனது முறையீட்டைக் கேட்டு வானுலகத்தவர், "எவனோ, எங்கோ, பதுங்கி இருக்கிறான்!" என்றார்கள்.

2. கிரகங்களோ, "மேல்வானத்தில் எவனோ இருக்கிறான்!" என்று கூறின.

3. "இல்லை, இந்தக் குரல் மண்ணுலகிலிருந்தே வருகிறது!" என்றது வெண்மதி.

4. விண்மீன் குழுக்கள், "இங்குதான் எவனோ பதுங்கி இருக்கிறான்!" என்றன.

5. என் முறையீட்டை உண்மையில் கேட்டறிந்தது, சுவர்க்கத்தின் வாயில் காப்பாளரான ரில்வான் என்னும் வானவரே!

6. சுவனலோகத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மனிதன் என்பதை அவரே அறிந்தார்.

## 3

1. இந்த விபரீதமான குரல் எங்கிருந்து வருகிற தென்று அறியமுடியாமல் வானவரும் வியப்புற்றனர்!

2. "வான லோகத்தவராகிய நமது அறிவுக்கும் எட்டாத இந்த இரகசியந்தானென்ன?" என்று அவர்கள் திகைத்தனர்!

3. வானைநோக்கி வழி நடந்து ஆண்டவன் சன்னிதானமாகிய அர்ஷ் வரையில் வரக்கூடிய துணிவு மனிதனுக்கு உண்டா?

4. ஒரு பிடி மண்ணாலாக்கப்பட்ட மனிதனுக்கு வானேக்கி வரும் வன்மை வந்துவிட்டதா?

5. இந்த மண்ணுலகத்தவர் எவ்வாறு நன்னெறி தவறிவிடுகிறார்கள்!

6. கீழ் உலகில் இருப்போர் மரியாதை தவறிக் குறும்பு மிகுந்த அதிகப்பிரசங்கிகளாகி விட்டார்கள்!

## 4

1. மனிதர்களுடைய செருக்கு மிகுந்து, இறைவனை யும் நிந்திக்கத் துணிந்துவிட்டார்களே !

2. ஒரு காலத்திலே இந்த மனிதனுக்குத்தான் வான வர் சிரம் பணிந்தனர் !

3. அக நிலையையும் ஆற்றலையும் பற்றிய எத்த னையோ இரகசியங்களை நன்கறிந்தவன், இந்த மனிதனல் லவா ? தர்க்கத்தையும் தத்துவத்தையும் நன்கு அறிந் வனும் இந்த மனிதன்தான்.

4. இஃதெல்லாம் மெய்யே. ஆயினும், பணிவு என்னும் பண்பை அறியாதவன் !

5, தங்களுக்குத்தான் பேச்சு வன்மை உண்டென்று இந்த மானிடர் செருக்குற்றிருக்கின்றனர் !

6. ஆனல், பேசும் கலையின் தன்மையும் ஒழுங்கும் தெரியாத அறிவிலிகளாக இருக்கிறார்களே !

## 5

1. அச்சமயம், ஓர் அசரீரி வாக்கு எழுந்தது! "உனது கதை துயர் நிரம்பி இருக்கிறது!"

2. பொறுக்க முடியாத துக்கக் கண்ணீர்த் துளிகளால் உன் மதுக்கிண்ணம்[1] நிறைந்து, ததும்பிக் கொண்டிருக்கிறது!

3. உன் ஆவேசப் பைத்தியத்தின் ஆரவார முழக்கமானது வானையும் பிளந்து வந்து, விண்ணுலகையும் வசப்படுத்திவிட்டது!

4. வெறி பிடித்த உன் மனமானது உன் நாவில் இவ்வித அவமரியாதையான வார்த்தைகளை எவ்வாறு உண்டாக்கிவிட்டது!

5. நீ சமர்ப்பித்த அழகான முறையால் உனது நிந்தனைச் செய்யுளையுங்கூட புகழ்மாலையாக மாற்றிவிட்டாயே!

6. அடியார்களையும் இறைவனோடு சம நிலையில் நீ வைத்துவிட்டாயே!

---

1. மதுக்கிண்ணம்—கண்கள்.

## 6

1. நன்றி செலுத்துவதைப்போல ஆரம்பித்து முறையீடு செய்த முஸ்லிமே! கேள்! நாமோ எப்பொழுதும் கருணைவள்ளலாகவே இருந்து வருகிறோம். ஆனால், அதை விரும்பிக் கேட்போர் காணப்படவில்லையே!

2. நாம் யாருக்கு நேர்வழி காட்டுவது? சேருமிடத்தை நோக்கிச் செல்வோர் இல்லையே!

3. நாம் எல்லோருக்கும் ஞானக் கல்வி அளிக்கக் காத்திருக்கிறோம். ஆனால், அதைப் பெற்றுக்கொள்ளுந் தகுதியுள்ளோர் காணப்படவில்லையே!

4. நாம் எந்த மண்ணினால் ஆதமைப் படைத்தோமோ, அந்த ஆதமை மறுபடியும் உருவாக்கவேண்டுமானால் அதற்குரிய மண் இதுவல்லவே!

5. பெற்றுக்கொள்ளும் தகுதியுள்ளோர் உண்டெனில், அவர்களுக்கு நாம் கணக்கற்ற சம்பத்துக்களைக் கொடுக்கிறோம்! [1]

6. வேட்கை மிகுந்து தேடி அலைவோருக்குப் புதியதொரு உலகத்தையே கொடுத்துவிடுகிறோம்!

---

1. The rise of Islam is perhaps the most amazing event in the history of the world. Springing from a land and people alike previously negligible, Islam within a century spread over half the earth, shattering great empires, overthrowing long established religions, remoulding the soul of races and building up a new world—the world of Islam—*Dr. Stoddard in his "The New World of Islam."*

## 7

1. உங்கள் கைகளோ சக்தியற்றவை. உங்கள் உள்ளங்களோ நாஸ்திகத்தில் பழகிவிட்டன.

2. உங்கள் பெருமானுருக்கு உங்களால் வெட்கமே யன்றிப் பெருமை கிடையாது.

3. விக்ரகங்களை உடைத்தெறிவோர் காலஞ்சென்று விட்டார்கள். இப்பொழுதிருப்போர் விக்ரக ஆராதனை யாளரே.

4. விக்ரகங்களை உடைத்த இப்ராஹீம் நபியின் வழி வந்த நீங்கள், அவரது சந்ததிகளாக இருப்பதைவிட்டு, விக்ரகங்களை விற்று வந்த அவரது தந்தை ஆளர் போலாகிவிட்டீர்கள்.

5. மது அருந்துவோரும் புதியோர். மதுவும் புதிது. மதுக்கிண்ணமும் புதிதே. [1]

6. உங்கள் கஅபாவும் புதிது. விக்ரகங்களும்[2] புதியன. நீங்களும் புதியவர்கள்.

---

1. முறையீடு—9 பார்க்க
2. விக்ரகங்கள் — பணம், பதவி, பட்டம், பூமி முதலியன.

## 8

1. இயற்கை மதமான இஸ்லாத்தின் ஆண்டவன் உங்களுக்கு அழகாகத் தோன்றிய காலமும் இருந்ததே!

2. வன மல்லிகையானது[1] வசந்த காலத்தின் அரசியாக இருந்த காலமும் இருந்ததே!

3. முஸ்லிம் என்பவன் இறைவெறி பிடித்தவனுக வாழ்ந்த ஒரு காலமும் இருந்தது.

4. இப்பொழுதுள்ள உங்கள் பல நிலைக் கடவுளேயே, உங்கள் பூர்ண அன்புக்கு உரியோனுக நீங்கள் காதலித்த ஒரு காலமும் இருந்தது.

5. ஆகையால், நீங்கள் ஒருநிலை நாதனை நாடி, அவனுக்கே அடிமைகள் என்று உறுதிப்பிரமாணம் செய்து கொள்ளுங்கள்.[2]

6. அகில உலகுக்குமுரிய முஹம்மத் நபியின் இஸ்லாம் மார்க்கத்தை உங்கள் குறுகிய மனப்பான்மை யின் காரணமாக ஒரு வட்டார மார்க்கமாகச் செய்துகொள் ளலாமா? நீங்கள் செய்துகொண்டீர்களே ![3]

---

முறையீடு—22 பார்க்கவும்.

1. வன மல்லிகை—முஸ்லிம்

2. "பலநிலைக்கடவுள்" என்றீர்களே! நாட்டுக் கடவுளை, இனக் கடவுளை, இடக் கடவுளைப் பற்றிப்பிடித்துக்கொள்ளுங்கள். இஸ்லாமை விட்டுவிட்டு குப்ரை ஏற்றுக்கொள்ளுங்கள். ஏனென்றல், காபிர்களுக்குக் கிடைக்கும் பேறுகள் உங்களுக்கும் கிடைக்கும்.

3. பல நாடுகள், பல இனங்களைச் சேர்ந்த முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்தாலொழிய முஸ்லிம்களுக்கு வெற்றி கிடைக்கமுடியாது என்கிருர் அல்லாமா இக்பால்.

## 9

1. அதிகாலைத் தொழுகை தற்கால முஸ்லிம்களான உங்களுக்குத் துன்பமாகத் தோன்றுகிறதே!

2. உங்களுக்கு என்னிடம் அன்பு இருக்கிறதா? இல்லையே! ஆனால், இன்பக் கனவுகள் நிறைந்த நித்திரையே தொழுகையைவிட உங்களது ஆத்ம சுக சஞ்சீவியாயிருக்கிறதே!

3. விடுதலை வேட்கை மிகுந்த உங்களுக்கு ரமலான் மாதத்தில் நோன்பு நோற்றல், சிறைவாசம்போல் வெகு தொல்லையாய் விட்டதே!

4. நீங்கள் என்னிடம் கொண்டுள்ள விசுவாசத்தின் விதிகளும் நிபந்தனைகளும் இவைதானே? நீங்களே கூறுங்கள்!

5. மதத்தை ஒழுங்காய்ப் பின்பற்றும் காரணத்தால் தான் ஒவ்வொரு இனமும் உயர்ச்சிபெறமுடியும். அத்தகைய மார்க்கக் கொள்கைகள் உங்களிடம் செயலளவில் இல்லையேல், நீங்களும் இல்லாதொழிவீர்கள்.

6. ஈர்க்கும் ஆற்றல் இல்லையேல், விண்மீன் கூட்டமும் இருக்கமுடியாதல்லவா?

---

1. முஸ்லிம் இனத்தின் அடித்தளம் தேசியப் பித்தைச் சார்ந்ததன்று. ஆனால், மதத்தின் அடிப்படையில் அமைக்கப் பட்டது. மதம் பின்பற்றப்படாவிட்டால், அந்த இனமும் முடிவடைந்துவிடும். இஸ்லாமிய கோட்பாடுகளைக் கைவிட்ட முஸ்லிம்களெல்லாம் பிணம் போன்றவர்களே!

## 10

1. தொழில் திறமையற்ற ஓர் இனம் உலகில் இருக்குமானல், அது உங்கள் இனமே.

2. தங்கள் நிலைமையைப்பற்றிய கவலையே இல்லாத இனம் ஒன்று உண்டெனில், அது உங்கள் இனமே!

3. இடிவிழுந்து பாழாய்ப்போன நெற்போரை ஒத்தது உங்கள் இனமே![1]

4. மூதாதைகளின் புதைகுழிகளை விற்றுக் காலங் கழிப்பவர் உளரென்ருல், அவர்கள் நீங்களே!

5. சமாதி (கப்ர்) வணிகஞ் செய்வதில் நீங்கள் கீர்த்தி பெற்றுவிட்டீர்களே!

6. இத் தன்மையுள்ள உங்களுக்கு விக்ரகங்கள் கிடைத்துவிட்டால் அவற்றையும், விற்பனை செய்ய மாட்டீர்களா?

---

1. "இஷ்கெ ரஸூல்" என்ற பெருமானுர் மீது புனிதக் காதல் நெருப்பை, எவராயினும் உங்கள் உள்ளத்திலே வளர்த்து விட்டால் அந்த நெருப்பும் உடனே குளிர்ந்துவிடுமே!

(க-ரை) புதியன கண்டுபிடித்தல், இலக்கிய ஆராய்ச்சி, மூதாதைகளுக்கு இழிவு வராமல் பாதுகாத்தல், போன்ற பண்புகள் உங்களிடம் இல்லையே! ஆனல், அவர்களது புதைகுழிகளை விற்றுச் சாப்பிடுகிறீர்கள். புதை குழியை விற்கும் நீங்கள், விக்ரக வியாபாரஞ் செய்தல் வியப்பாகுமா?

Q7:4
N56



TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 111441
EGMORE, MADRAS

11

1. அஞ்ஞானத்தை உலகினின்றும் ஓட்டியது யார்?

2. மக்கள் இனத்தை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்தது யார்?

3. என் கஅபாவை நெற்றி வணக்கத்தால் நிரப்பியவர் யார்?

4. என் குர்ஆனை நெஞ்சோடு அணைத்தவர் யார்?

5. அவ்வாறு செய்த அவர்களெல்லாம் உங்கள் மூதாதைகளே! ஆனால், நீங்கள் செய்ததென்ன?

6. நம்பிக்கை இழந்து, தோல்வி மனப்பான்மையுடன் "நாளை! நாளை!" என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் செயலற்ற சோம்பேறிகள் நீங்களல்லவா?[1]

---

முறையீடு—13 பார்க்கவும்.

1. இழிவான நடைமுறை வாழ்க்கையை கைக்கொண்டீர்கள். அவ்வாறிருந்தும் இறைவனது கருணையை எதிர்பார்க்கிறீர்களே!

## 12

1. என்ன சொன்னுய் ? முஸ்லிம்களுக்கு ஹூர்கள் கிடைப்பரென்ற, வெறும் வாக்கு மட்டும் நாம் அளித்தோம் என்ருயா ?

2. நெறிதவறிக் குறைகூறினுலும், அதை அறிவுடன் கூறலாகாதா ?

3. இயற்கையின் இறைவனுடைய சட்டமானது அனுதி காலமுதல் நியாயம் வழங்குதலே.

4. இஸ்லாமிய சட்டங்களே காபிர்கள் பின்பற்றுவாராஞல், அவர்களுக்கு ஹூர்களும், மாடமாளிகைகளும் கிடைக்கத்தான் செய்யும் !

5. ஆனுல், உங்களில் ஹூர்களே விரும்புவோர் ஒருவருமிலரே !

6. தூர் மலேயின் ஜோதியோ ஆயத்தமாக இருக்கிறது. ஆனுல், அதைப்பெற விரும்பும் மூஸா இல்லேயே !

---

முறையீடு—16 பார்க்கவும்.

## 13

1. இந்த முஸ்லிம் இனத்தின் இலாபமும் ஒன்றே, நஷ்டமும் ஒன்றே.

2. உங்களது நபியும் ஒன்றே; தீனும் ஒன்றே; ஈமானும் ஒன்றே.

3. கஅபாவும் ஒன்றே; அல்லாஹ்வும் ஒன்றே; குர்ஆனும் ஒன்றே.

4. இவ்வித அனுகூலங்களையுடைய முஸ்லிம்கள் அனைவரும் ஒன்ருகிவிட்டால் எவ்வளவு நன்ருக இருக்கும்?

5. உங்களில் பல பிரிவுகள் இருக்கின்றன. பல ஜாதிகளும் இருக்கின்றன.

6. ஆனல், இவற்றின்மூலமாக நீங்கள் இன்றைய உலகில் உயர்வு பெறமுடியுமா?

## 14

1. என் தூதருடைய சிறப்பான சட்டதிட்டங்களைப்[1] புறக்கணித்து விட்டவர் யார் ?

2. காலத்திற்கேற்ற கோலம்[2] போடுவோர் யார் ?

3. காபிர்களின் கலைகளைத் தங்கள் கண்களுக்குக் கவர்ச்சியுடன் காட்சியளிப்பதாகக் கொண்டவர் யார் ?

4. தங்கள் மூதாதைகளின் வாழ்க்கை விதிகளை இன்பமற்றவை என்று இழிவுபடுத்துவோர் யார் ?

5. உங்கள் உள்ளத்திலே ஆசையில்லை ! உங்கள் ஆவியிலே ஆவேச உணர்ச்சியில்லை ! இஸ்லாத்தின்மீது உங்களுக்குப் பற்றில்லை !

6. நம்து தூதர் (ஸல்) உடைய போதனைகளுக்கு உங்களிடம் மதிப்பே இல்லை !

---

1. சட்டதிட்டங்கள் = ஷரீஅத்.

2. காலத்திற்கேற்ற கோலம் = காலத்திற்கேற்றபடி நடந்து இலாபம் அடைதலே உங்கள் மதம். ஷரீயத்திற்கு மாற்றமாக இருப்பினும், "சுயநலம்" என்னும் அளவு கோலால் அதை அளந்து மதிப்பிட்டுச் செயலாற்றுகிறீர்கள்.

## 15

1. இக்காலத்திலே, பள்ளிவாசலில் வரிசை வரிசையாக நின்று தொழுவோர் ஏழைகளே !

2. நோன்பின் கஷ்டங்களைச் சகிப்போர் ஏழைகளே!

3. நமது நாமத்தை உச்சரிப்போர் யாரேனும் உளரேல், அவர்களும் ஏழைகளே !

4. உங்களுடைய குற்றங் குறைகளை மறைத்து உங்கள் அவமானத்தைக் காப்போர் ஏழைகளே!

5. சீமான்களோ, செல்வத்தில் மதி மயங்கி நம்மை முற்றிலும் மறந்துவிட்டனர் !

6. ஏழை மக்களின் வாழ்க்கையினுல்தான் ஷரீஅத் என்னும் இஸ்லாமிய தர்மம் உயிரோடிருக்கிறது.

## 16

1. முதிர்ந்த பேரறிவும், மேலான ஆராய்ச்சியும், இஸ்லாமிய மத போதகரிடம் இல்லை !

2. உள்ளத்தை உருக்கும் தீப்பொறிகள் அவர்களது வார்த்தைகளில் கிடையாது !

3. பாங்கு [1] சொல்லும் சடங்கு மட்டும் ஒருவாறு நடக்கிறது. ஆனால், பிலால்[2] உடைய உள்ள உணர்ச்சி அதில் இல்லையே !

4. தத்துவ சாஸ்திரம் மட்டும் இருக்கிறது. ஆனால், அதற்குகஸ்ஸாலியின்[3] விளக்கவுரை காணப்படவில்லையே!

5. தொழுவோர் வரக்காணவில்லை என்று பள்ளி வாசல்கள் கூட அழுகின்றன.

6. அதாவது, ஆரம்ப முஸ்லிம்களைப் போன்ற சற்குணசீலர்கள் இக்காலத்தில் இல்லையென்று.

---

1. பாங்கு = இஸ்லாமிய தொழுகைக்கு விடும் அழைப்புக் குரல்.

2. பிலால் (Bilal) = பெருமானாரவர்களால் மதீனா பள்ளி வாசலில் பாங்கு சொல்வதற்காக நியமிக்கப்பட்டவர். அவர் பெருமானாருக்காகவே வாழ்ந்தார்.

3. கஸ்ஸாலி (Ghazzali) = பெரிய விஷயங்களை எளிய முறையில் விளக்கிய ஒரு முஸ்லிம் தத்துவ ஞானி.

முஸ்லிம்கள் தர்க்க நூல் (மன்திக்) தத்துவ நூல் (பல்ஸிபா) இவற்றை அரபி மதரஸாக்களில் கிளிப் பிள்ளைகளைப்போல் கற்கிறார்கள். இமாம் கஸ்ஸாலியைப்போல் உங்களிடம் இஸ்லாமிய பற்றில்லை. அவரைப்போல் இஸ்லாமியப் பிரச்சாரம் - தப்லீக் - நீங்கள் செய்வதில்லை.

## 17

1. உலகில் முஸ்லிம்கள் அழிந்துகொண்டே போகிறார்கள் என்று பெருங்கூச்சல் செய்யப்படுகிறது !

2. ஆனால், "முஸ்லிம்கள் என்போர் எங்கேனும் இருக்கிறார்களா ?" என்று நாம் கேட்கிறோம்.

3. வெளித்தோற்றத்திலே நீங்கள் கிறிஸ்தவர்களைப்போல் காணப்படுகிறீர்கள். நாகரிகத்திலே, வாழ்க்கைத் துறையிலே, ஹிந்துக்களைப்போலும் இருக்கிறீர்கள்.

4. வாணிபத்தில் யூதர்களும் உங்களைக் கண்டு வெட்கப்படும்படியான நீங்களா முஸ்லிம்கள் ?

5. ஸையித் என்கிறீர்கள் ! மொகல் என்கிறீர்கள் ! பட்டான் என்கிறீர்கள் !

6. இப்படிப் பல பிரிவுகளாக உங்களையே நீங்கள் வகுத்தும் தொகுத்தும் பிரித்துக்கொண்டீர்கள் ! ஆனால், நீங்கள் முஸ்லிம்கள்தானா என்பதைக் கூறுங்கள் ![1]

---

1. முஸ்லிம் சகோதரத்துவத்திலே உயர்வு தாழ்வுகள் கிடையா. இறைவன் முன்னிலையிலே எல்லோரும்சமமே. இஸ்லாம் சமைத்த சமத்துவத்தையும் சகோதரத்துவத்தையும் தற்கால முஸ்லிம்கள் மறந்துவிட்டார்கள். நாடு, நிறம், மொழி, குலம் இவற்றின் அடிப்படையில் சிலர் தம்மை உயர்மக்களாகக் கருதுகின்றனர் ! இத்தகைய மக்களுக்கு ஆன்ம நேய ஒருமைப்பாடு எங்கிருந்து கிடைக்கும் ?

## 18

1. பூர்வ முஸ்லிம்கள் உண்மை உரைப்பார்கள். அதில் அவர்களுக்கு அச்சமே கிடையாது.

2. முஸ்லிமுடைய நீதி வன்மை யுடையது. இஸ் லாமிய நீதியில் ஒருதலைப் பட்சம் என்பதே கிடையாது!

3. முஸ்லிமுடைய இயற்கையில் இறைகாதல் என்பதே உள்ளும் புறமும் நிறைந்திருந்தது!

4. வீரத்திலோ, மாவீரர் அனைவரிலும் முஸ்லிமே அறிவுக்கு எட்டாத உயர்வில் இருந்தான்!

5. மது அருந்துவோனது வாயிலிருக்கும் மது குறைந்துகொண்டே போவதைப் போல, உண்மையான முஸ்லிம் தந்நலத்தை இழந்துகொண்டே போவதில் ஆவலுள்ளவனாக இருந்தான்!

6. மதுவை ஊற்றும் கிண்ணத்தைப் போல முஸ்லி மானவன் தன்னையே அர்ப்பணித்துக்கொண்டு போனான்! [1]

---

1. இஸ்லாத்திற்காகவே—மனித இனத்தின் சேவைக் காகவே பூர்வ முஸ்லிம்கள் வாழ்க்கை நடத்தினார்கள்.

## 19

1. ஒவ்வொரு முஸ்லிமும் அஞ்ஞான விலங்குச் சங்கிலிகளை[1] எந்த வேளையிலும் வெட்டி வீழ்த்தும் வாளாக விளங்கினான்.

2. அவனது வாழ்க்கைக் கண்ணாடியில் நற்செயல்களே நவமணிகள் போல ஒளி விட்டுக்கொண்டிருந்தன.

3. முதலாவதாக இறைவன்மீதும், பிறகு தனது வீரத்திலும், அவனுக்கு முழுநம்பிக்கை இருந்தது.

4. உங்களுக்கு மரணத்தின் பயம். ஆனால், அவனுக்கு அல்லாஹ்வின் பயம்.

5. தந்தையின் பண்புகள் மைந்தனிடம் இல்லையேல்,

6. மூதாதைகளின் பெருமையை மைந்தன் எவ்வாறு பெறமுடியும்?

---

1. அஞ்ஞான விலங்குச் சங்கிலி=குப்ர், அதாவது, இறைவனை நிராகரித்தல்.

## 20

1. உங்களில் ஒவ்வொருவரும் சரீர சுகமென்னும் மதுவை உண்டு மயங்கிக் கிடக்கின்றீர்கள்!

2. நீங்கள்தான் முஸ்லிம்களா? முஸ்லிம்களின் வாழ்க்கை முறை இதுதானு?

3. அலீயைப்போல் வறுமையில் பெருமை கொள்வோர் உங்களில் இல்லையே! உஸ்மானைப்போல் செல்வச் சீமான்களும் உங்களில் காணப்படவில்லையே!

4. உங்களது மூதாதைகளோடு உங்களுக்கு ஏதாவது ஆத்மீகத் தொடர்பு இருக்கிறதா? இல்லையே!

5. அவர்கள் இஸ்லாமிய வாழ்க்கை நடத்தியதால் தான் அவர்களுக்குப் பெருமை கிடைத்தது.

6. ஆனல், நீங்களோ குர்ஆனைப் புறக்கணித்து இழிநிலை அடைந்தீர்கள்.

## 21

1. நீங்கள் மூர்க்கர்கள். அவர்களோ அன்பர்கள்.

2. நீங்கள் குற்றம் செய்கிறீர்கள். பிறர் குற்றம் காணும் கவலையும் கொள்கிறீர்கள். அவர்களோ பிறர் குற்றத்தை மறைக்கும் கருணையுள்ளோர்.

3. மிகச் சிறந்த எழுமீன் கூட்டம் போன்ற உயர்ச்சியை உங்கள் வாசஸ்தலமாக்கிக் கொள்ள நீங்கள் எல்லோரும் விரும்புகிறீர்களே!

4. ஆனல், உங்கள் மூதாதைகளின் உயர்ந்த உள்ளங்களை [1] முதலாவதாக, நீங்கள் உண்டாக்கிக் கொள்ளுங்கள்.

5. சீன அரசர்களின் சிம்மாசனமும், பாரசீகப் பேரரசரின் கிரீடமும் அவர்களுடையதாயிருந்தன.

6. அந்தத் திறமை [2] உங்களிடம் ஏது? நீங்களோ வெறும் பேச்சாளர்கள் தாமே!

---

1. உள்ளம்—தூய, பூரண உள்ளம். தக்வா (இறை பயபக்தி), ஈமான், (இறை விசுவாசம்) இர்பான் (இறை காதல் அறிவு)—இவையனைத்தும் உள்ள உள்ளம்.

2. தன்மதிப்பிற்காக; உயிரையும் அர்ப்பணஞ் செய்ய ஆயத்தமாகும் ஆவேச உணர்ச்சி.

## 22

1. உங்கள் அழிவை நீங்களே தேடிக்கொள்ளும் குணம் உங்களிடம் உண்டு. ஆனால், உங்கள் மூதாதைகள் தன்மதிப்புள்ளவர்கள்; கண்ணியத்தை விரும்புவோர்.

2. இஸ்லாமிய சகோதரத்துவத்தையே நீங்கள் தகர்க்கிறீர்கள். அவர்களோ அதற்காகத் தங்கள் உயிரையே அர்ப்பணம் செய்தார்கள்.

3. பேச்சைத் தவிர வேறொன்றும் உங்களுக்குத் தெரியாது. அவர்களுக்கோ நற்காரியம் செய்வதைத் தவிர வேறொன்றும் தெரியாது.

4. பூவின் அரும்புகூடக் [1] கிடைக்காமல் நீங்கள் தவிக்கிறீர்கள். அவர்களோ சிங்காரப் பூங்காவிலே மங்காத இன்பம் அனுபவித்தார்கள். [2]

5. அவர்களது வீர வரலாறுகளை இன்றுவரை உலக மக்கள் மறந்து போகவில்லை.

6. உலக வரலாற்று ஏடுகளிலே அவர்களது நற்செயல்கள் இன்றுவரை பெருமையுடன் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன.

---

1. அரும்பு = அரசாங்கமும், உயர்வும், மரியாதையும்.

2. நீங்கள் செல்வத்தை நாடிச் செல்கிறீர்கள். ஆனால் செல்வம் அவர்களது பாதங்களில் வந்து வீழ்ந்தது.

# 23

1. ஒரு காலத்திலே, உங்கள் நாட்டு வானிலே நட்சத்திரங்களைப் போன்று, நீங்கள் ஒளியிட்டுக் கொண்டிருந்தீர்கள்.

2. ஆனால், இப்பொழுது இந்தியாவின் விக்ரகங்கள் மீதேற்பட்ட காதலிலே நீங்கள் புரோகிதர்களாகவும் மாறிவிட்டீர்கள்.[1]

3. உங்களுக்கு இன்பமளித்து வந்த தாயின் கூட்டைத் துறந்து,[2] பறக்கும் ஆசை கொண்ட பறவைக் குஞ்சுகள் போன்று வெகுதூரம் சென்றுவிட்டீர்கள்.

4. உங்கள் வாலிபர்கள் இஸ்லாமிய கட்டளைகளை மறந்தார்கள். அவற்றின் மேன்மையைப்பற்றி ஐயமும் கொண்டார்கள்.

5. நவ நாகரிக மோகமானது அவர்களை எல்லா விதமான இஸ்லாமிய கட்டுப்பாடுகளிலிருந்தும் விடுதலை செய்துவிட்டது.

6. கஅபாவிலிருந்து அவர்களைக் கொண்டுவந்து, விக்ரக ஆலயங்களில் அவர்களைக் குடியேற்றிவிட்டது.[3]

---

1. இறைவன் உங்களுக்குத் தலைமைத்துவம் அளித்தான். ஆனால், நீங்கள் இஸ்லாமை விட்டுவிட்டீர்கள். குப்ரை ஏற்றுக் கொண்டீர்கள். என் தூதரை மறந்தீர்கள்; விக்ரகங்களோடும் உலக இச்சைகளோடும் நெருங்கிய தொடர்புகொண்டீர்கள்.

2. கூட்டை = இஸ்லாத்தை. உங்கள் இகலோக வாழ்க்கையின் முன்னேற்றக் கவலையிலே, உங்கள் இஸ்லாமிய வாழ்க்கை விதிகளை நீங்கள் மறந்து துறந்தீர்கள்.

3. பள்ளிவாசல்களுக்குப் பிரதியாக ஹோட்டல், ஸினிமா, கிளப் முதலியனவற்றில் முஸ்லிம்கள் கூடுகிறார்கள்.

## 24

1. தனது காதல் பைத்தியத்திலே வனாந்தரத்தில் தனிமையாக அலைந்து துன்பப்படுவதை மஜ்னூன்[1] விட்டுவிட்டான்.

2. வனாந்தரங்களில் அலைவதை விட்டு, இப்பொழுது அவன் நகரக் காற்றை நுகர ஆரம்பித்து விட்டான்.

3. அவனோ பைத்தியக்காரன்! அவன் நகரில் இருந்தாலென்ன? காட்டிலிருந்தாலென்ன?

4. அவன் எங்கிருந்தாலென்ன? அவனுக்கு வேண்டியதெல்லாம் காதலி லைலாவின் முகம் தன்னைவிட்டு மறையாமல் இருத்தல் வேண்டும் என்பதே.[2]

5. ஆகையால், தயாளமில்லை யென்று எம்மீது குறை கூறுவதேன்? காரணமின்றி முறைப்பாடு செய்யலாமா?

6. காதலோ விடுதலை பெற்றுவிட்டது! ஏன் அழகும் விடுதலை பெறக்கூடாது?

---

1. மஜ்னூன்—கைஸ்—முஸ்லிம் வாலிபன்.

2. கடைத்தெருக்களில், கல்லூரிகளில், உணவு விடுதிகளில், சினிமா கூடங்களில், பந்தய மைதானங்களில், பொதுக் கூட்டங்களில் நமது சகோதரிகள் பர்தா முகமூடி இல்லாமல் தன்னுடன் செல்லவேண்டுமென்று முஸ்லிம் வாலிபன் ஆசைப் படுகிறான்.

க-ரை. முஸ்லிம் வாலிபர்களின் உள்ளங்களானது திருநபியவர்கள் மீதுள்ள தூய்மையான காதலை (இஷ்க் ரஸூல்) மறந்து விட்டன. முஸ்லிம் வாலிபர்கள் நபிநேசச் செல்வர்களாக இல்லை. முஸ்லிம் யுவதிகள் பர்தா கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை பெற்றுக் கொண்டேசெல்கிறார்கள். காதலன் சுவாதீனத்துடன் அலைந்தால் காதலி ஏன் பர்தாவில் இருத்தல் வேண்டும் என்று வாலிபர்கள் கூறுகிறார்கள்?

## 25

1. இந்த மேலைநாட்டு நவநாகரிக யுகத்திலே விபரீத மான மின்னல்கள் திடீர்திடீரென்று பிறந்து, ஒவ்வொரு நெற் போரையும் [1] எரித்துவிடுகின்றன.

2. காடாயினும் பூஞ்சோலையாயினும் இதிலிருந்து தப்புவதில்லை.

3. பூர்வீக இனங்களெல்லாம் இந்தப் புதிய நெருப் பின் முன்னால் விறகைப்போல் எரிந்து சாம்பலாகி விடு கின்றன.

4. இறுதி நபியைப் பின்பற்றுவோரின் ஆடை களிலும் இந்த நெருப்பு பற்றிக்கொண்டது. [2]

5. ஆனாலுமென்ன? அஞ்சாதீர்! இன்றும், இப் பொழுதும், இப்ராஹீம் [3] நபிபோன்ற இறை நம்பிக்கை (ஈமான்) பிறக்குமானால்,

6. இந்த நெருப்பே பூங்காவாக மாறிவிடுமே!

---

1. நெற்போர்—இஸ்லாம். லோகாயத ஆதிக்கம் நிறைந்த இக்காலத்திலே எல்லா இனத்தாருக்கும் வீழ்ச்சி அடையும் காரணங்கள் பல உள.

2. இந்த மேல்நாட்டு நாகரிக நெருப்பு முஸ்லிம்களையும் அழிக்க ஆரம்பித்துவிட்டது.

3. இப்ராஹீம் நபியை, நம்ரூத் என்னும் நாஸ்திக அரசன் நெருப்பில் போட்டபொழுது அந்த நபியார் ஆண்டவன்மீது கொண்டிருந்த பூரண நம்பிக்கையின் காரணமாக அந்த நெருப்பு உடனே பூப்படுக்கையாக மாறிவிட்டது.

## 26

1. தோட்டக்காரனே! [1] பூங்காவனத்தின் நாசநிலையைக் கண்டு நீ கவலைப்படாதே!

2. விரைவில் இதன் கிளைகளிலிருந்து நட்சத்திரங்களைப் போன்ற பூங்கொத்துக்கள் பிரகாசிக்கும் காலம் வரப்போகிறது!

3. பூந்தோட்டத்திலிருந்து குப்பை கூளங்கள் அகன்றுவிடும் காலம் வரப்போகிறது!

4. உயிர்த் தியாகிகளின் உதிரத் துளிகள் மலர் மழை பொழிவிக்கின்ற காலம் பிறக்கப்போகிறது! [2]

5. வானத்தின் நிறத்தைச் சற்றுக் கண்ணெடுத்துப் பார்! அது கருஞ் சிவப்பாயிருக்கிறது!

6. இந்தத் தோற்றமானது சூரியன் உதித்து மேலோங்கி வரும் அறிகுறியாகும்.

---

1. தோட்டக்காரனே!—முஸ்லிம் தலைவர்களே!

2. கவிதையின் போக்கு மாறுகிறது. முஸ்லிம் இனம் நம்பிக்கை இழந்துவிடக்கூடாது என்று அல்லாமா இக்பால் எச்சரிக்கிறார். முஸ்லிம் இனத்தின் தற்கால இழிநிலையைக்கண்டு அது முன்னேற வழியில்லை என்று நம்பிக்கை இழந்துவிடலாகாது. துன்ப மேகங்களெல்லாம் இஸ்லாமிய வானிலிருந்து வெகுவிரைவில் மறைந்துவிடும். இஸ்லாமிய மக்களின் "கெட்ட காலம்" மறைந்து "நல்லகாலம்" பிறக்கப்போகிறது. மார்க்கத் தியாகிகளின் இரத்தத் துளிகள் நாற்புறமும் மலர்மழையாகப் பெய்கின்றன. அதாவது முஸ்லிம்கள் உயிருள்ளவர்களாக இருக்கிறார்கள் என்ற அறிகுறிகள் பிறந்துகொண்டிருக்கின்றன.

## 27

1. உலக வாழ்க்கை என்ற பூஞ்சோலையிலே பல மதத்தார் மேலான கனிகளைப் புசித்து வாழ்க்கையில் வெற்றி கண்டார்கள்.

2. சிலருக்குப் பழமே கிடைக்காமல் போய்விட்டது. சில பழங்கள் இலையுதிர்காலத்தில் விழுந்து விட்டன.

3. மரங்களோ நூற்றுக்கணக்கில் இருக்கின்றன. அவற்றில் கெட்டனவும் உள்ளன, நல்லனவும் உள்ளன.

4. நூற்றுக்கணக்கான மரங்கள் பூஞ்சோலையின் வயிற்றிலே இன்னும் மறைந்திருக்கின்றன. [1]

5. இஸ்லாம் என்னும் மரமானது வெற்றிக்கு முன்மாதிரியாகத் திகழ்கின்றது.

6. பல நூற்றுண்டுகளாகப் பாடுபட்டுப் பண்படுத்திய பிறகு கிடைத்த பலன் இது.

---

1. இன்றைய முஸ்லிம்கள் மெய்யாகவே துன்பக் கடலில் இருந்தாலும், நம்பிக்கையிழக்கக் காரணமில்லை. புத்தம் புதிய இனத்தார்கள் இஸ்லாமிய சேவை செய்ய முன்வருவார்கள்.

## 28

1. உனது ஆடை நாட்டுப்பித்து என்னும் தூசியால் அழுக்குப்படாமல் பரிசுத்தமாயிருக்கிறது.[1]

2. குடியேறிச் சென்ற நாடாகிய எகிப்தையும் பிறந்த நாடாகிய கன்ஆன் நாட்டைப்போலவே ஏற்றுக் கொண்ட யூஸுஃப் நபியைப் போன்றவன் நீ.[2]

3. உன் பிரயாணக் கூட்டம் என்றைக்கும் அழியாதது.

4. உனது வனாந்தரப் பயணத்திலே முன்னேறிச் செல்வதற்கு ஒட்டக மணிகளின் கிண்கிணி ஓசை ஒன்றே உனக்குப் போதுமானது.

5. ஏ, ஒளி மரமே! உன்னுடைய வேர்களே விளக்கின் திரியாகி, தங்கள் சுவாலைகளால் மரத்தின் உச்சியைப் பிரகாசிக்கச் செய்கின்றன!

6. நெருப்பு நிறைந்த உன் எண்ணமானது எதிர் காலத்தில் வரக்கூடிய கவலைகளை எரித்துச் சாம்பலாக்கி விடும்![3]

---

1. "யாதும் ஊரே யாவரும் கேளிர்"—என்று முஸ்லிம்கள் செயலாற்றுகிறார்கள்.

2. முஸ்லிம் என்பான் சர்வதேசப் பிரஜை ஆவான். நபி பெருமானாரவர்கள் சகல உலகங்களுக்கும் காருண்யமாக (ரஹ்மத்-உல்-ஆலமீன்) அனுப்பப்பட்டார்கள். சகல உலகங்களையும் படைத்து, காத்து, நற்கதி சேர்ப்பிக்கும் அல்லாஹ்வே முஸ்லிம்களது இறைவன். உலக முழுதும் முஸ்லிமுடைய தாய் நாடு. உலக மக்களெல்லாம் முஸ்லிமுடைய சகோதரர்கள். யான் பெற்ற செல்வம் (ஏகதெய்வக் கொள்கையைச் செயலாற்றல்) இவ் வையகம் பெறட்டும் என்று முஸ்லிம் விரும்புகின்றான்.

3. முஸ்லிமுக்கு நாட்டுடனோ, இனத்துடனோ, மொழியுடனோ குருட்டுத்தனமான பற்றும் பித்தும் கூடாது. ஒரு நாடோ, ஓர் இனமோ அழிந்துவிட்டால் முஸ்லிம் இனமும் வீழ்ந்து விட்டதென்று கூறமுடியாது. முஸ்லிமே! நீ உலகிற்கு ஒரு விளக்காக விளங்குகிறாய். இவ் உலகில் முஸ்லிம் இனம் இல்லையேல், உலகமும் இராது. செயலாற்றுதலே முஸ்லிமுடைய கடன். அதன் பலனைப்பற்றிய கவலை அவனுக்கு இல்லை. ஆகையினால், உலகில் முஸ்லிமுக்கு வெற்றியும் பெற்றியும் கிடைப்பது உறுதி.

## 29

1. 'எனவே' இந்த நிலைமையில் இந்த உலகம் உய்ய, முஸ்லிமாகிய நீ தேவைப்படுகிறுய். ஆகவே ஈரான் அழிந்துபோவதால் நீ அழிந்துபோக மாட்டாய்.

2. மதுவின் மயக்கத்திற்கு மதுக்கிண்ணத்துடன் என்ன தொடர்பு? மதுவுடன்தான் தொடர்பு.[1]

3. தாதாரிகளது[2] படையெடுப்பின் வரலாறு உனக்குப் படிப்பினை கற்பிக்கவில்லையா?

4. விக்ரக ஆலயங்களிலிருந்து கஅபாவுக்குப் பாது காவலர் கிடைத்துவிட வில்லையா?[3]

5. சத்திய இஸ்லாத்தின் கப்பலை இக்காலத்தில் நடத்திச் செல்வது உனது பொறுப்பாகும்.[4]

6. இருண்ட இரவைப்போன்ற இந்த நவீன காலத்திலே, உலக மக்களுக்கு வழிகாட்டும் துருவ நட்சத்திரமாக நீயே அமைந்துள்ளாய்.

---

1. மதுக்கிண்ணமான ஈரானை நம்பி இஸ்லாம் இருக்கவில்லை.

2. தாதாரிகள் மத்திய ஆசியாவிலிருந்துவந்து கி. பி. 13-ம் நூற்றுண்டிலே இஸ்லாமிய ராஜ்யங்களையும் கலைகளையும் அழித்தார்கள். ஆனால், சிலகாலஞ் சென்று அவர்களே முஸ்லிமாகி விட்டார்கள்.

3. அப்பாஸி கலீபாக்களின் சாம்ராஜ்யமும் அதன் தலைநகர் பக்தாதும் அழிந்தவுடன் இஸ்லாம் அழிந்துவிட்டதா? இல்லையே! அப்பாஸிகளின் பேரரசை அழித்த அதே துருக்கியர் அப்பால் முஸ்லிம்கள் ஆனுர்கள். இஸ்லாம் மார்க்கத்தின் பாதுகாவலரும் ஆனுர்கள்.

4. முஸ்லிமாகிய நீயே இஸ்லாமியக் கப்பலை ஓட்டும் மாலுமி ஆவாய். எனவே, இக்காலத்திய இனங்களெல்லாம் உன்னிடமிருந்தே ஒளிபெறுவார்கள்.

## 30

1. பல்கேரியர் இஸ்தம்பூல்மீது படையெடுத்து வந்தமையால் திகிலடைந்து விட்டாயே![1]

2. அஞ்சாதே! உண்மையில் இது தூங்குவோரைத் தட்டியெழுப்பும் ஒரு சங்கநாதமாகும்.

3. இதை மனக்கவலை உண்டாக்கும் நிகழ்ச்சியென்று நீ நினைக்கிருயே.

4. இல்லை! இது உன் தியாகம், தன்மதிப்பு இவற்றின் சோதனையேயாகும்.

5. உன் பகைவரது குதிரைகளின் கனைப்பைக் கேட்டு ஏன் நடுங்குகிருய்?

6. உன் பகைவர்கள் தங்கள் வாயால் ஊதிய சிறு காற்ருல் இஸ்லாமிய மெய்யொளி அணைந்துவிடாது.

---

1. அல்லாமா இக்பால் இதை 1913-ல் எழுதினுர். 1912-13ல் பல்கேரியா, கிரீஸ், ரூமானியா, ஸர்வியா ஆகிய அண்டை நாடுகள் ஒன்றுசேர்ந்து துருக்கியின்மீது படையெடுத்தன. துருக்கியர் இதனுல் அழிந்துவிடுவர் என்ருே, உலகிலிருந்தே இஸ்லாம் மறைந்து விடுமென்ருே இதன் பொருளல்ல. ஆனுல், முஸ்லிமாகிய உனது தியாக குணம், அகநிலை, தளராமுயற்சி, வீரம் முதலியவற்றை இறைவன் சோதனை செய்கிருன். பகைவரின் பெருக்கால் பயந்துவிட்டாயா? அவர்கள் இஸ்லாத்தை அழிக்க முடியாதென்று உறுதியாக நம்பு.—குர்ஆன் 54:45, 3:22, 8:41, 5:3 பார்க்கவும்.

## 31

1. உனது உண்மையான நிலைமையை உலக மக்கள் இன்னும் அறிந்துகொள்ளவில்லை.

2. இவ்வையகத்தின் வாழ்க்கைக்கு முன் மாதிரியாக இருந்து அதைச் சீர்திருத்த நீ இன்னும் தேவைப்படுகிறாய்.

3. உனது ஊக்கத்தின் இயக்கத்தாலே உலக வாழ்க்கை பிரகாசமடையவேண்டும்.

4. நீ உலகின் விதியை நிர்ணயிக்கும் நட்சத்திரம் ஆவாய். இறைவனுடைய (கலீபா) பிரதிநிதியாக உலகில் நீயே பிரகாசிப்பாய்!

5. இளைப்பாறும் நேரம் உனக்கு எங்கிருக்கிறது? நீ செய்யவேண்டிய பணி இனியும் எவ்வளவோ இருக்கிறதே!

6. தவ்ஹீதின்[1] மெய்யொளியைப் பூரணமாக்கும் சேவைக்காக உன்னுடைய தூண்டுதல் இவ்வுலகினுக்கு இன்னும் தேவையாயிருக்கிறதே!

---

1. தவ்ஹீத்—ஏகதெய்வக் கொள்கை.

(க-ரை.) முஸ்லிமே! நீ இப்பொழுது உலகிற்குத் தேவைப்படுகிறாய் என்பதை உன்னை அழிக்க விரும்பும் உலகிலுள்ள பல இனத்தார் அறியமாட்டார்கள். நீ ஆற்றவேண்டிய பணி இன்னும் எவ்வளவோ இருக்கிறதே! நீ இருப்பதால்தான் இந்த உலகமும் இருக்கிறது. உலகில் இஸ்லாமிய கொள்கைகளின் ஆதிக்கம்தான் இருக்கும். இந்த விதியை எந்த சக்தியும் மாற்ற முடியாது. எனவே, நீ எழுந்திரு! தவ்ஹீத் என்ற ஏகதெய்வக் கொள்கையை உலகில் பரப்புவாயாக!

## 32

1. பூவின் அரும்பினுள் இருக்கும் மணத்தைப்போல நீ சிறைப்பட்டிருக்கிருயே. எழுந்திரு ! பரவிவிடு !

2. பூஞ்சோலையின் தென்றலுடன் கலந்து உலகெங்கும் உனது வாசனை கமழும்படி செய்துவிடு !

3. இழிவான சிறு அணுவாக இருக்கிருயே ! பெரும் பாலைவனமாக மாறிவிடு !

4. இலேசான இளங்காற்றின் அலையாயிருக்கிருயே ! சக்திவாய்ந்த பெரும் புயலாகப் பெருகிவிடு !

5. உன் அன்பின் வன்மையினுலே அற்பப் பொருளையெல்லாம் உயர்ந்ததாகவும் புகழுடையதாகவும் செய்துவிடு !

6. அகிலமெல்லாம் முஹம்மத் (ஸல்) நபியின் நாமம் பிரகாசிக்கும்படி செய்துவிடு !

---

(க-ரை.) முஸ்லிம்களே ! உங்கள் ஒதுக்கிடத்திலிருந்து வெளிக் கிளம்பி இஸ்லாமின் தூதைத் தாங்கி உலகெல்லாம் பரவிவிடுங்கள். உங்களது பலவீனத்தை மாற்றி, உங்களை பலசாலிகளாக்கும் சக்தியும், நீங்கள் சிறுபான்மையோராக இருந்தால் பெரும்பான்மையோருக்குச் சமமாக்கும் வன்மையும் இஸ்லாத்தில் இருக்கிறது. இரு லோகங்களுக்கும் வழிகாட்டியான பெருமானுரின் நேசத்திலே நீங்கள் அழிந்துபோங்கள். இந்த நேசத்தின் மூலமாக உங்களில் அந்நிலையில் அரிய சக்தி பிறக்கும் என்பதை உறுதியாக நம்புங்கள். இதன் பலனுக நீங்கள் நபிகள் நாதரின் திருப்பெயரை உலகெங்கும் உயர்த்துவீர்களாக !

## 33

1. இந்த மலர் [1] இல்லையேல், புல்புல் பறவையின் பாடலும் இல்லாமற் போகும்.

2. உலகப் பூங்காவிலே மொட்டுகளின் புன்முறுவலும் இல்லாமற்போகும்.

3. இந்த மதுவளிப்போன் இல்லாவிட்டால் மதுவும் இல்லை; மதுக்கிண்ணமும் இல்லை.

4. தவ்ஹீத் (ஏகத்துவ) கொள்கையுள்ளோரும் இவ்வுலகில் இருக்கமாட்டார்கள். நீங்களும் இல்லாமற் போவீர்கள்.

5. வானுலகங்களின் கூடாரம் இந்தப் பெயரால் தான் தாங்கப்படுகிறது.

6. இந்தப் பெயரினல்தான் மக்களது வாழ்க்கையின் சுவாச இயக்கம் பிறக்கிறது. ஆவேச நெருப்பும் உண்டாகிறது.

---

1. மலர் = எம்பெருமானுர் முஹம்மத் (ஸல்)

(க-ரை) முஸ்லிம்களே! பெருமானுரின் புனிதப் பெயரில்லையேல் இந்த உலகம் பாழாகிவிடும். நபி பிரானுடைய முன்மாதிரியான வாழ்க்கையால்தான் உலகில் ஒளி வீசுகிறது. அந்த அண்ணல் நபி இல்லையேல் தவ்ஹீத் என்ற ஏகதெய்வக் கொள்கையுடையோர் இருக்கமுடியாது. தவ்ஹீதும் இராது. முஸ்லிம்களாகிய நீங்களும் இருக்கமுடியாது, மெய்யாகவே, பெருமானுரின் திருநாமத்தின் ஆசீர்வாதத்தால், உலகப் படைப்புகளெல்லாம் நிலைத்திருக்கின்றன. மாநபியின் மகிமையால் நமது நரம்பு நாடிகளில் இயக்கம் பிறக்கிறது. வாழ்க்கை வளம்பெறுகிறது.

## 34

1. இந்தப் பெயர் காடுகளிலும், மலைகளிலும், சம வெளிகளிலும் இருக்கிறது!

2. கடல்களிலும், அலைகளின் மடியிலும், புயற் காற்றிலும் இருக்கிறது!

3. சீனாவின் நகரங்களிலும், மொராக்கோ பாலை வனத்திலும் இருக்கிறது!

4. மேலும், முஸ்லிம்களுடைய ஈமானில் மறைந் திருக்கிறது!

5. உலகம் முடியும் வரை எல்லா இனத்தாரும் இந்தக் காட்சியைக் கண்டுகொண்டே இருப்பார்கள்!

6. "ரபஅனா லக திக்ரக்"[1] என்று நாம் முஹம்மத் (ஸல்) உடைய புகழை உயர்த்தியதையும் உலகத்தார் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

---

1. இது குர்ஆன் வாக்கியம். "முஹம்மதே! நாம் உமது புகழை உலகில் உயர்த்தினோம். அல்லவா?"-என்று இறைவன் கூறுகிறான்.

(க-ரை):—காடுகள், மலைகள், மைதானங்கள், கிராமங்கள், எல்லா இடங்களிலும் எம்பிரான் முஹம்மத் (ஸல்) உடைய நாமம் மக்களின் நாவில் இருக்கிறது. இவை எல்லாவற்றையும் விட அதிகமாக, அது ஒவ்வொரு முஸ்லிமுடைய உள்ளத்திலும் மறைந்திருக்கிறது. திருத்தூதரவர்களது திருப்பெயர் நியாயத் தீர்ப்பு நாள்வரை, இவ்வாறே உயர்வுபெற்று ஒளிவீசிநிற்கும். ஏனென்றால், "தூதரே! நாம் உமது நாமத்தை உலகெல்லாம் உயர்த்திவிட்டோம்" என்று இறைவனே குர்ஆனில் வாக்களித் திருக்கிறான். குர்ஆன் 93:5, 18:1-3, 108:1, 24:58, 70:36-39 20:108, 61:9, 48:28, 9:2.

## 35

1. பூமியில் கண்ணின் கருவிழிபோன்ற அந்த அபிஸீனியக் கருப்பு உலகம்.

2. உங்களது மார்க்கத்தியாகி (ஷஹீத்)களை உருவாக்கிய உலகம்! [1]

3. தாங்கமுடியாத வெப்பமுள்ள இளம்பிறைக் கொடி (ஹிலால்) உலகம்! [2]

4. "பிலால் உலகம்" [3] என்று இறைகாதலர் கூறும் உலகம்!

5. இந்த உலகமானது முஹம்மத்(ஸல்) என்ற புனித நாமத்தைக் கேட்டுப் பாதரசம் போன்று நடுங்கு கிறது! [4]

6. மேலும், கண்களின் கருமணிபோன்று மெய் யொளியில் அது நீந்திக்கொண்டிருக்கிறது!

---

1. பெருமானாரவர்கள் மக்காவில் இஸ்லாமியப் பிரச்சாரஞ் செய்தபொழுது முஸ்லிம்களை குரைஷிகள் துன்புறுத்தினார்கள். ஆகையால், திருநபியவர்கள் பல முஸ்லிம்களை அபிஸீனியா (ஹபஷ்) நாட்டிற்கு அனுப்பினார்கள். அந்த நாட்டு மன்னர் அவர்களுக்கு ஆதரவு தந்தார். கருப்பு நிறமுள்ள மக்கள் வசிக்கும் ஆப்பிரிக்கா கண்டத்திலே, உலகின் கண்ணின் கருவிழி போன்ற அபிஸீனியா நாட்டு அரசர் நஜ்ஜாஷி என்பவர் ஆரம்ப முஸ்லிம்களுக்குப் புகலிடம் கொடுத்து ஆதரித்தார்.

2. அபிஸீனியாவிலிருந்து மராகஷ் வரை உலகிலேயே பெரியதான ஸஹரா பாலைவனமும் கொடிய வெயிலும் உண்டு.

3. ஸைய்யிதினா ஹஸ்ரத் பிலால் (ரலி) உடைய பூர்வநாடு அபிஸீனியா (ஹபஷ்).

4. இஸ்லாமிய மெய்யொளி பெற்ற இருண்ட கண்டமான ஆப்பிரிக்காவின் மூலைகளிலெல்லாம் பள்ளிவாசல் மனாராக் களிலிருந்து முஹம்மத் (ஸல்) என்ற நாமம் கிளம்பி உயர் வானிலே சென்று ஒலியின் அலைகளாக இயங்கிப் பிரகாசிக்கிறது.

## 36

1. உனது அறிவே உன் கேடயம்! இறை காதலே (இஷ்க்) உனது வாளாயுதம்!

2 பக்தனே![1] உலகம் முழுவதிலும் நீ என்னுடைய பிரதிநிதி ஆவாய்!

3. உன் தக்பீர் முழக்கமானது அல்லாஹ்வைத் தவிர மற்றெல்லாவற்றையும்.[2] வென்றுவிடும்.

4. நீ உண்மையான முஸ்லிமானால், உனது முயற்சியே (தத்பீர்), உன்னுடைய விதி (தக்தீர்) ஆகும்.[3]

5. நீ முஹம்மதிடம் விசுவாசமாக இருப்பாயாகில், நாம் உனக்குச் சொந்தமாகிவிட்டோம்.

6. இந்த உலகம் ஒரு பெரிய பொருளா? "லவ்ஹ்-கலம்"[4] என்ற என்னுடைய சர்வ வல்லமையும் உன்னுடையதே!

---

1. தர்வேஷ்!—என்கிறார் இக்பால். இந்த வார்த்தையானது முஸ்லிமுடைய உண்மை நிலைமையைக் குறிப்பிடுகிறது. ஏனென்றால், தர்வேஷ் நிலையின் பண்புகள் நிறைந்த முஸ்லிமையே இறைவன் விரும்புகிறான். உதாரணமாக, ஹஸ்ரத் உமர் பாரூக் (ரலி), ஹஸ்ரத் உமர்-பின்-அப்துல் அஜீஸ் (ரஹ்), நூருத்தீன் ஜங்கீ, ஆலம்கீர் (ரஹ்) போன்ற ராஜரிஷிகள், தவராஜ யோகிகள்.

2. மற்றெல்லாம்—பொன், மாதர், பூமி இவை மூன்றும் இறைவனை மறக்கும்படி செய்துவிடுகின்றன. இவற்றின் மீதுள்ள ஆசையைவிட, அல்லாஹ்வின் மீதுள்ள காதலே பிரதானமாக அமைதல் வேண்டும்.

3. அப்பால் நீ எதை விரும்புகிறாயோ அவ்வாறே நடக்கும்.

4. எல்லாப் படைப்புகளும்

(க-ரை) இறுதியாக, இறைவன் முஸ்லிம்களை நோக்கிக் கூறுகிருன் :—

" முஸ்லிமே ! உனக்கு இரண்டுவிதமான மேன்மைகளை நாம் அளித்திருக்கிறோம். உன்னிடம் நேசத்தின் சக்தியும் இருக்கிறது; அறிவுப் பொக்கிஷமும் இருக்கிறது. நேசத்தை உனது வாளாக உபயோகி ! அதாவது, நமது தூதர் (முஹம்மத் ஸல்) பெயரை உலகில் சிறப்புறச் செய் ! இந்தப் பணியில் எத்தகைய துன்பங்கள் வரினும், அவற்றை உனது அறிவின் உதவியால் அகற்றிவிடுவாயாக. அதாவது, அறிவைக் கேடயமாக மாற்றிவிடு. அதாவது, முற்றிலும் நீ நமது அடியானுக ஆகிவிட்டால்—மெய்யாகவே முஸ்லிம் ஆகிவிட்டால், உனது தத்பீர் அறிவானது நம்முடைய பிரியத்தில் கலந்து மறைந்துவிடும். உன்னுடைய ஒவ்வொரு விருப்பத்தையும் நாம் பூர்த்தி செய்வோம். மேலும், நீ, நமது திருத்தூதரிடம் விசுவாசமாக இருப்பாயானுல் அதாவது, அவரை முழுமனதுடன் பின்பற்றி வாழ்க்கை நடத்தினுல், இந்த உலகமென்ன—நாம் உன்னை எல்லாப் படைப்புகளின் அதிகாரியாகவே ஆக்கிவிடுவோம்."

குர்ஆன் 14 : 32-34.

Q7:4
N56

முற்றும்.

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 111441

# குழந்தையின் பிரார்த்தனை

## (அல்லாமா இக்பால்)

★

1. என் உள்ளத்தில் உதித்த ஆசையெல்லாம் வேண்டுகோளாக உருவெடுத்து உதட்டில் வருகிறது. இறைவா! என் வாழ்க்கையை ஒரு தீபத்தைப்போல் அமைத்துவிடு!

2. என் வாழ்க்கையின் மூலமாய் உலகிலிருந்து இருளை அகற்றிவிடு! என் பிரகாசத்தால் ஒவ்வோரிடத்திலும் ஒளி உண்டாக்கிவிடு!

3. மலர்களால் பூந்தோட்டத்திற்கு எழிலுண்டாவதைப்போல் என் உயிரால் என் நாட்டிற்கு உயர்வு உண்டாக்கிவிடு!

4. இறைவனே! என் ஜீவிதம் ஒரு விட்டிலைப் போல் ஆகட்டும்! அறிவு என்னும் விளக்கை நான் நேசிக்கட்டும்!

5. என் பணியெல்லாம் ஏழைகளுக்கு உதவி செய்வதாகவே இருக்கட்டும்!* துன்புற்றோரையும், வயோதிகரையும் நான் நேசிக்கட்டும்!

6. என் அல்லாஹ்வே! என்னைத் தீமையிலிருந்து காப்பாற்றுவாயாக! நேர்மையான பாதையிலே என்னை நடத்துவாயாக!

---

* "அன்பர்பணி செய்யஎன்னை ஆளாக்கி விட்டுவிட்டால், இன்பநிலை தானேவந்து எய்தும் பராபரமே"

—தாயுமானவர்

# சர்வதேசீய கீதம்

(அல்லாமா இக்பால்)

1. சீனமும் அரேபியாவும் எங்கள் நாடே! இந்துஸ்தானமும் எங்கள் நாடே! இறைவனுக்கு இணங்கும் "முஸ்லிம்கள்" நாங்களே! உலகெலாம் எங்கள் நாடே!

2. ஒரே இறைவன் என்ற தவ்ஹீத் கொள்கை எங்கள் உள்ளங்களிலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது! எனவே, அடையாளம் தெரியாமல் எங்களை அழித்துவிடல் எளிதல்ல!

3. உருவ வணக்கக் கோவில்கள் நிறைந்த உலகினிலே. ஒரே இறைவனை அருவமாக வணங்குவதற்கான முதல் ஆலயம் கஅபா. நாங்கள் அதன் பாதுகாவலர். அதில் வணங்கப்படும் இறைவன் எங்கள் காப்பாளன்.

4. வாளின் நிழலிலே வளர்ந்து* நாங்கள் வாலிபரானோம். வாளும் பிறையும் எங்கள் இனச் சின்னமாகும்.

5. மேல்நாட்டுப் பாலைப் பள்ளத்தாக்குகளிலெல்லாம் எங்கள் பாங்கொலியின் எதிரொலி கேட்டது. எங்கள் இயக்கத்தின் வேகத்தை எவராலும் தடுக்க முடியவில்லை.

---

* கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே
வாளொடு முன்தோன்றி மூத்தகுடி
—புறப்பொருள் வெண்பா மாலை

N56-3

6. வாரிதியே! எங்களைப் பொய்யானது அழித்து விடமுடியாது! நூறுதடவை நீயே எங்களைச் சோதனை செய்திருக்கிறாயே!

7. அந்தலுஸ் பூங்காவனமே! உன் கிளைகளிலே எங்கள் கூடு கட்டியிருந்த அந்தநாட்கள் உனது நினைவில் இருக்கின்றதா?

8. தஜ்லா நதியின் அலையே! நீ எங்களை அறிகிறாயா? இன்றுங்கூட உன் கரைகள் எங்கள் சரித்திரச் சின்னமாகவே விளங்குகின்றன.

9. புனித அரபுநாடே! நின் கீர்த்திக்காக நாங்கள் வெட்டுண்டு மடிந்தோம்! உன் நரம்புகளில் எங்கள் இரத்தம் இன்றுவரை ஓடிக்கொண்டிருக்கிறதே!

10. ஹிஜாஸ் அதிபரான முஹம்மத் (ஸல்) எங்கள் பிரயாணக் குழுவின் தளபதி அந்தப் பெயரால்தான் எங்கள் உயிர்களுக்கு ஆறுதல் கிடைக்கின்றது.

11. இக்பாலின் கவிதையானது அதிகாலையிலே ஒட்டகப் பிரயாணிகளை எழுப்பும் மணியோசை ஆகட்டும்! எங்கள் பிரயாணக் கூட்டம் மறுபடியும் விழித்து முன்னேறிச் செல்லட்டும்.

---

இம்பீரியல் அச்சகம், பெரியகம்மாளத்தெரு, திருச்சி 40/57–2000.

7B
9-10



கே. எஸ். அப்துல் வஹாப் சாஹிப் (ஜானீ)

உரிமையாளர், மான் மார்க் பீடி,

தஞ்சாவூர் ரோடு — திருச்சிராப்பள்ளி

இம்பீரியல் அச்சகம், பெரியகம்மாளத்தெரு, திருச்சிராப்பள்ளி—57.